Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-27 09-02-2005 புதன்கிழமை ஓசை -357



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11253) விநாயகர் வீதி, மயிலிட்டி.

### - இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் இருமுகாம்களுக்கிடையில் -

# போராளிகள் சுட்டுக் கொல்லப்பட்டமை

# அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல்!

## சமாதான முயற்சிகளுக்கும் மனித நேயப்பணிக்கும் பெரும் பங்கம் விளைவிக்கும் என புலிகள் எச்சரிக்கை



(கிளிநொச்சி)

**அரசியல்பணிக்காக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினூடாகப் பயணித்த எமது போராளிகள் இரு இராணுவ முகாம்களுக்கிடையில் சுட்டுக்கொல்லப்பட்டது அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும். இச்சம்பவம் முன்னெடுத்துச் செல்லப்படும் மனித நேயப் பணிக்கும் தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதான முயற்சிகளை மீளத்தொடங்குவதற்கும் பெரும்பங்கம் விளைவிக்கக்கூடும் என நாம் அஞ்சுகிறோம்.**

**இவ்வாறு மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் போராளிகள் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பாக தமிழீழ அரசியல் துறை நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.**

அவ்வறிக்கையின் முழுவடிவம் வருமாறு:

சுனாமித் தாக்கத்தின் விளைவாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட அழிவுகளிலிருந்து மக்களுக்கு மறுவாழ்வளிக்கும் திட்டங்கள் தொடர்பாகத் தலைமைப்பீடத்துடன் கலந்துரையாடிவிட்டு மட்டக்களப்பு நோக்கிச் சென்ற மட்டு -அம்பாறை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இ.கௌசல்யன் மற்றும் போராளிகள் பயணித்த வாகனத்தை பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்த இராணுவ முகாமிற்கும், வாழைச்சேனை புனானை இராணுவ முகாமிற்கும் இடையேயுள்ள பிரதேசத்தில் நேற்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகப் பகுதியெங்கும் ஐந்து தினங்கள் துக்கம் அனுஷ்டிப்பு

### - பொதுஅமைப்புக்கள் ஏற்பாடு

கடந்த திங்கள் பொலநறுவை வெலிகந்தப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வீரச்சாவடைந்த மட்டு-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட போராளிகளிற்காகவும் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் நாட்டுப்பற்றாளர்களினையும் நினைவு கூர்ந்து நேற்றைய தினம் வட கிழக்கு தமிழர் பகுதிகளில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. வீதிகள், கடைகள், பொது இடங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் என்ப பல இடங்களிலும் கறுப்பு வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டு சோக கீதங்கள் இசைக்க விடப்பட்டன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, வன்னி. திருகோண

(12ஆம் பக்கம் பார்க்க)



மட்டக்களப்பில்...

## எமது வாகனத்தைப் பின் தொடர்ந்து வந்தவர்களே தாக்குதலை நடத்தினர்

### -காயமடைந்த போராளி தெரிவிப்பு

தாங்கள் பயணித்த வாகனத்தைப் பின்தொடர்ந்து இராணுவச் சீருடையில் வந்தவர்களே தாக்குதலை மேற்கொண்டதாக உயிர் தப்பிய போராளி தெரிவித்துள்ளதாக தமிழ்நெட் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி காயமடைந்த போராளியின் தகவலின்படி, தாங்கள் பயணித்த வாகனத்தைப் பின் தொடர்ந்து வந்த வான் ஒன்று ஆளரவமற்ற பிரதேசத்தில் தங்களுடைய வாகனத்திற்கு முன் னோக்கிச் சென்று, தங்களது வாகனத்திற்கு குறுக்கே நிறுத்தப் பட்டதாகவும்,

மேற்படி வாகனத்தில் வந்த அனைவரும் சிறிலங்கா இராணுவச் சீருடையில் இருந்ததாகவும், அவர்கள் தங்களுடைய வாகனத்தில் வந்த அனைவரையும் இறங்குமாறு பணித்ததாகத் தெரிவித்ததோடு, முன்னாள் பாராளுமன்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திடம் பதிவு செய்த பின்பே கௌசல்யன்குழுவினர் பயணம் செய்தனர்

### - மட்டு- அம்பாறை நிர்வாக பொறுப்பாளர் துயாமோகன்

விடுதலைப் புலிப்போராளிகள் பயணம் செய்த வாகனம் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் இராணுவ சீருடை தரித்த கும்பல்கள் என விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட நிர்வாக பொறுப்பாளர் தயாமோகன் கருத்து வெளியிட்டுள்ளார்.

பொலநறுவை மாவட்ட வெலிகந்த சம்பவம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், இராணுவ ஒத்துழைப்புடன் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதால் இதற்கான பொறுப்பை இராணுவம் தான் ஏற்க வேண்டும் இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் ஏற்கனவே இப்படியான பல சம்பவங்கள் இடம் பெற்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளின் வித்துடல்களை ஒப்படைப்பதில் பொலிசார் இழுத்தடிப்பு

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்த பிரதேசத்தில் நேற்று முன்தினமிரவு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டு பொலநறுவை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப்டினன்ட் கேணல் இ.கௌசல்யன் மற்றும் 4 போராளிகள் உட்பட்ட ஐவரின் பிரேத பரிசோதனைகளை மட்டக்களப்பு வைத்தியசாலையில் நடத்துமாறு பொலநறுவை மாவட்ட நீதிபதி திருமதி சிவபாதசுந்தரம் நேற்று மாலை உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து இந்தவித்துடல்கள் பொலநறுவை வைத்தியசாலையிலிருந்து மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் வழித் துணையுடன் இராணுவ பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அத்துடன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்-முஸ்லிம் உறவைக் கட்டியெழுப்பியவர் கௌசல்யன்

### - ஏறாவூர் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம்

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இ.கௌசல்யனின் மரணம் குறித்து ஏறாவூர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் அனுதாப அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

பல வருடங்களாக சிதைந்து போய் கிடந்த தமிழ் - முஸ்லிம்களின் உறவை கட்டியெழுப்பும் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளுக்கு தன்னாலான பங்களிப்பை செய்து அதனை அமுல்படுத்தி வரும் வேளையில் அவரது இந்த அகால மரணம் எமக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## கௌசல்யன் கொலை தொடர்பாக பாராளுமன்றத்தில் கவனஈர்ப்புப் பிரேரணை

### - மலையக மக்கள் முன்னணி கொண்டுவருகிறது

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இ.கௌசல்யன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இன்று சிறிலங்கா பாராளுமன்றத்தில் மலையக மக்கள் முன்னணி கவனயீர்ப்பு பிரேரணையொன்றை முன் வைக்கவிருக்கின்றது.

இது தொடர்பாக மலையக மக்கள் முன்னனியின் பாராளுமன்ற குழுத் தலைவர் பெ.சந்திரசேகரம் சபாநாயகரின் அனுமதியைக் கோரியுள்ளார். குறிப்பிட்ட விடயம் தொடர்பாக அவர் கருத்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## கௌசல்யன் கொலை சமாதான முயற்சிகளில் தேக்கநிலையை ஏற்படுத்திவிட்டது.

கௌசல்யன் கொலை சமாதான முயற்சிகளில் தேக்க நிலையை ஏற்படுத்தியதாக ஐக்கிய தேசியக் கட்சி கருத்து வெளியிட்டுள்ளது. ஐ.தே.க. தலைமையகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற செய்தியாளர் மநாட்டில் இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனாரத்ன, இந்தப் படுகொலைச் சம்பவமானது சமாதான செயற்பாடுகளில் தேக்க நிலையை ஏற்படுத்தியுள்ளது. போர் நிறுத்த உடன்படிக்கையின் படி அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிராயுதபாணிகளாக நடமாடும் விடுதலைப் புலிகளுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்க வேண்டி

(12ஆம் பக்கம் பார்க்க)



## T.V.S உந்துருளிகளின் உரிமையாளர் கவனத்திற்கு!

T.V.S

சுனாமி கடல் அனர்தத்தினால் பாதிக்கப்பட்ட T.V.S உந்துருளிகளின் உரிமையாளர்கள் தங்களது T.V.S உந்துருளிகளை 12.02.2005 சனிக்கிழமை சிவகுரு உந்துருளி வாணிபத்திற்குக் கொண்டு வரவும். அன்று T.B.S நிறுவனத்தினரால் இலவச சேவை வழங்கப்படும். முன்கூட்டியே பதிவை மேற்கொள்ளும் பொருட்டு T.V.S உரிமையாளர்கள் 11.02.2005 அன்று சிவகுரு வாணிபத்தில் பதிவை மேற்கொள்ளவும்.

சிவகுரு கட்டடப் பொருள் உந்துருளி வாணிபம்
யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி

## பணிநிலை வேண்டுகை

01.உந்துருளி திருத்துநர் (மெக்கானிக்) அனுபவமுடையவர்கள் விண்ணப்பிக்கவும்

02.காவலாளி :- 40 வயதுக்கு மேற்பட்டவர் மற்றும் பரந்தன், கிளிநொச்சிக்குட்பட்ட பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

சம்பளம் பேசித் தீர்க்கப்படும்

மேற்குறிப்பிட்ட பணிகளை செய்ய விரும்புபவர்கள் 11.02.2005 இல் நேரடியாக சிவகுரு உந்துருளி கட்டடப் பொருள் வாணிபத்துக்கு காலை 10 மணிக்கு வருகைதரவும்.

சிவகுரு கட்டடப் பொருள் உந்துருளி வாணிபம்
யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி

(சி.11277)


## 46 ஆம் நாள் நினைவில்



**திரு.ச.மகேந்திரராசா**
**காவலாளி**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**முல்லைத்தீவு.**

கூடி இருந்த உறவொன்று
கூடும் விட்டு பிரிந்ததோ - அன்று
கதைத்திருந்த கதைகளும் தான்
கனவு போல இருக்குது இன்று
உனதான்மா சாந்திபெற
உத்தமனை வேண்டுகிறோம்.

26.12.2004 அன்று ஆழிப்பேரலையால் உயிரிழந்த உத்தியோகத்தர்கள் ,பொது மக்கள் அனைவரையும் இந் நாளில் நினைவு கூருகின்றோம்.

பிரதம பொறியியலாளர்,
நிறைவேற்றுப்பொறியியலாளர்,
உத்தியோகத்தர்கள், வீதி
அபிவிருத்தி அதிகாரசபை,
முல்லைத்தீவு.(மாங்குளம்)

(5711)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி
### சரஸ்வதி வேலாயுதம்
(கோப்பாய் மத்தி)

கடந்த 10.01.2005 அன்று இறை வனடி சேர்ந்த எமது விளையாட்டுக்கழக வீரரான. வே.சுந்தர லிங்கம் (சுதன்)அவர்களின் அன்புத் தாயாரும், உருத்திரபுரம் மேற்குக் கிராம அலுவலா திருமதி. சாரதாம்பாள் - சுந்தர லிங்கம் அவர்களின் அன்பு மாமியாரும், ஆன அன்னாரின் ஆத்மாசாந்திய டையப் பிரார்த்திப்பதுடன் குடும்பத்தினரின் துயரிலும் பங்குகொள்ளுகின்றோம்

உழவர்ஒன்றியவிளையாட்டுக் கழகமும்
சனசமூக நிலையமும்,
சிவநகர், உருத்திரபுரம்.

(5479)

# வீரவணக்கம்



லெப்டினனட் கேணல்
# கௌசல்யன்
(அரசியற்துறைப் பொறுப்பாளர் மட்டு-அம்பாறை பிராந்தியம்)

தங்கத்தமிழ் மகனே!
தலைவரின் வரிப்புலியே!
எங்கள் மனம் நிறைந்த
எளிமையின் தனியுருவே!
ஆழிப்பேரலையால்
அகதியான எம்மவர்க்கு
வாழும் வழியமைக்க
வருந்தி நீ செயற்பட்டதை
மீள நினைக்கின்றோம்.
மீண்டும் எங்கள்
இலட்சியம் நோக்கி
நாங்கள் விரைகின்றோம்.

யாழ் மாவட்ட
கூட்டுறவாளர்கள் சார்பில்
யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி
கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்
யாழ்ப்பாணம்.

07-02-2005 அன்று பொலநறுவை மாவட்டம் - வெலிக்கந்த பகுதியில் இடம்பெற்ற சூட்டுச்சம்பவத்தில் இவருடன் வீரச்சாவு அடைந்த மேஜர் புகழன், மேஜர் செந்தமிழன், 2ஆம் லெப். விதிமாறன் ஆகிய மாவீரர்களுக்கும் நாட்டுப்பற்றாளர் சந்திரநேரு அரியநாயகம் அவர்களுக்கும் எமது வீரவணக்கங்கள்.

(சி-11276)

# இஸ்ரேல் — பலஸ்தீன தலைவர்கள்

# நேற்று முதல் யுத்த நிறுத்தம் அறிவிப்பு

## யுத்த நிறுத்தம் தம்மைக் கட்டுப்படுத்தாதென ஹமாஸ் அறிவிப்பு

(டெல்அவிவ்)

**இஸ்ரேல்-பலஸ்தீன பிரச்சினைக்கு சமாதானப் பேச்சின் மூலம் தீர்வைக்காணும் பொருட்டு இரு நாட்டுத் தலைவர்களும் நேற்று யுத்த நிறுத்த்த்தை அறிவித்துள்ளனர்.**

அமெரிக்காவின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சரான கொண்டலீசா றைஸ் இஸ்ரேலிய பலஸ்தீனத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்த யுத்த நிறுத்தத்தை அமைதிக்கான வரைவுத் திட்டம் எனப்படும் அமைதி முயற்சிகள் தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப் பதற்கான முதற்படி யாகும் என்று இரு தலைவர் களும் கூறியுள்ளனர்.




அனைத்துப் பகுதிகளிலு முள்ள இஸ்ரேலியர்கள் பலஸ்தீனர் களுக் கெதிரான அனைத்து வன் முறை நடவடிக்கை களையும் இந்த யுத்த நிறுத்தம் தடை செய்யும் என்று பலஸ்தீன தலைவர் முகமட் அப்பாஸ் கூறியுள்ளார்.

இந்த யுத்த நிறுத்தம் ஒரு திருப்பு முனையைக் கொடுக்கு மென்று இஸ்ரேலிய பிரதமர் ஏரியல்ஷரோன் தெரிவித்துள்ளார். இஸ்ரேலிய சிறைகளிலுள்ள நூற்றுக் கணக்கான பலஸ்தீனரை விடுதலை செய்யவும் ஏரியல் ஷரோன் முன்வந்துள்ளார்.

இஸ்ரேலுடனும். பலஸ்தீனத் துடனும் ஒத்துழைப்பதற்கான தீர்மானமொன்றில் எகிப்தும், யோர்தானும் கைச்சத்திட்டுள்ளன. 4 வருட இடைவெளிக்குப் பின்னர் இஸ்ரேலியத் தூதரக உறவை மீண்டும் ஏற்படுத்தப் போவதாகக் கூறியுள்ளன.

இதேவேளை இஸ்ரேலும், பலஸ்தீனமும் செய்து கொண்டுள்ள யுத்த நிறுத்தம் தம்மையும், தமது நடவடிக்கையையும் கட்டுப் படுத்தாது என பலஸ்தீன தீவிர வாத இயக்கமான ஹமாஸ் இயக்கம் அறிவித்துள்ளது.



இஸ்ரேலிய சிறைகளிலுள்ள பலஸ்தீனரை விடுவிக்கக் கோரி நேற்று முன்தினம் பலஸ்தீனத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

## கள்ளத்தனமாகக் குடியேறியோருக்கு ஸ்பெயின் பொதுமன்னிப்பு

(மெட்ரிட்)

ஐரோப்பாவுக்கான தலைவாசலாக ஸ்பெயின் இருக்கிறது. அந்த நாட்டில் 8 இலட்சம் பேர் கள்ளத்தனமாகக் குடியேறி உள்ளனர். "அவர்களுக்கு நேற்று முன்தினம் பொது மன்னிப்பு வழங்கப்படும்" என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. ஏற்கனவே திருட்டுத்தனமாகக் குடியேறி, எந்தவிதமான வரியும் செலுத்தாமல் வேலை செய்பவர்களை ஓழுங்குபடுத்த இந்தப் பொது மன்னிப்புத் திட்டம் உதவும் என்று நம்பப்படுகிறது. அத்தோடு அந்நியர்களை கண்காணிக்கவும் இது உதவும் என்றும் கூறப்படுகிறது.



பலஸ்தீனத் தலைவர் முகமட் அப்பாஸும் அமெரிக்காவின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலீசாறைசும் இஸ்ரேல்- பலஸ்தின பிராச்சினைக்கு சமாதானத்தீர்வு ஏற்படுத்துவது பற்றிய பேச்சுவார்த்தை நடத்திய பின் பத்திரிகையாளரைச் சந்திக்கின்றனர்

## ஈராக்கில் இரு தற்கொலைத் தாக்குதல்கள்

## இருபத்தேழு பேர் பலி; 20 பேர் காயம்

### –அல்ஹைதாவின் துணைப்பிரிவு உரிமை கோருகிறது

(பாக்தாத்)

ஈராக்கில் நேற்று முன்தினம் மொசூல் மற்றும் பகுஜா நகரங்களில் இடம் பெற்ற இரு கார்க் குண்டுத் தாக்குதல்களில் இருபத் தேழுபேர் கொல்லப்பட்டுள்ள தோடு இருபது பேர் காயமடைந் துள்ளனர்.

ஈராக்கின் மூன்றாவது பெரிய நகரமான மொசூல் நகரின் மருத்துவ மனையின் மீது தற்கொலை படை யினர் வெடிகுண்டுகள் நிரம்பிய காரை நேற்று முன்தினம் மோதியதில் அங்கு பாது காப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 12 பொலிசார் பலியாயினர். நான்கு போ படு காயமடைந்தனர்.

இதற்கிடையில் பகுபா நகரில் பொலிஸ் தலைமை அலுவலகத் தின் பிரதான வாயிலில் மற்றொரு கார்குண்டு வெடித்தது. · இந்த சம்பவத்தில் 15 பேர் கொல்லப் பட்டனர் 16 பேர் காயமடைந்தனர். இந்த இரண்டு தற்கொலைத் தாக்கு தல்களுக்கும் அல்ஹைதா வலையமைப்பின் துணைப்பிரிவான அபுமுஷாப் அல்ஸர்காலி தலைமையிலான கிளிர்ச்சியாளர்கள் இணையத்தளத்தில் அறிக்கை வெளியிட்டு உரிமை கோரியுள்ளனர்.

ஈராக்கில் சதாம் ஆட்சி வீழ்த்தப பட்டபின் அங்கு தங்கியுள்ள வெளி நாட்டு படைகளுக் கெதிரான தாக்கு தல் தொடர்ந்து வருகிறது. சதாம் ஆதரவு கொரில்லாக்கள் பொலிஸ் நிலையங்களையும் வெளிநாட்டு படையினர் தங்கியுள்ள முகாம் களையும் கார்க்குண்டுகள் மூலம் தகர்த்து வருகின்றனர். சனநாயக முறைப்படி தேர்தல் நடந்தால் எல்லாம் சரியாகி விடும் எனப் பார்த்தால் பழைய நிலையே நீடிக் கிறது.



## இராணுவத்தை விமர்சிக்க நேபாள அரசு புதிய தடை

(காத்மண்டு)

இராணுவத்தை விமர்சிக்க, நேபாள அரசு தடை விதித்துள்ளது. நேபாளத்தில் பிரதமர் ஷெர் பகதூர் தாபா அரசைக் கலைத்து. அரசுப் பொறுப்பை மன்னர் ஞானேந்திரா ஏற்றுள்ளார். அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டு, உலக நாடுகளில இருந்து நேபாளம் துண்டிக் கப்பட்டுள்ளது. இராணுவத்தின் பாதுகாப்புப் பிடியில் நாடு உள்ளது. பத்திரிகைகள் அரசால் தணிக்கை செய்யப்படுகின்றன. அரசியல் கட்சிகள் கடையடைப்பு நடத்தத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

'மாவோயிஸ்ட் தீவிரவாதி களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வரும் இராணுவத்தை அரசியல் தலைவர்கள் நிர்வாகிகள நேரடியாகவோ, மறைமுகமா கவோ விமர்சிக்கக் கூடாது. இதை மீறுபவர்கள் கைது செய்யப் படுவார்கள்' என்று நேபாள அரசு நேற்று முன்தினம் புதிய தடை பிறப் பித்தது.

'தொலைபேசி பேச்சுக்கள், பக்ஸ தகவல்கள், ஈ-மெயில்கள் மற்றும் இதர தகவல் தொடர்பு முறைகள் அனைத்தையும் இராணுவம் கண்காணிக்கும். தேவைப்பட்டால் அத்தகவல்கள் செய்திகளை தடை செய்யும்' என்றும் உத்தரவிடப் பட்டது.

பொது இடங்களில் மக்கள் கூட்ட மாக கூட, கடந்த முதலாம் திகதியி லிருந்து தடை விதிக்கப்பட்டு இருந் தது. நேற்று முன்தினம் அது விலக் கிக் கொள்ளப்பட்டது.



ஈராக்கின் மொசூல் நகரில் வீதிப்பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள அமெரிக்க 24 ஆவது கலால் படைப்பிரிவைச் சேர்ந்த சிப்பாய்.

## ஆளுங்கட்சிக்கு வெற்றி

தாய்லாந்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த தேர்தலில் பிரதமர் தக்சின் ஷினவாத்ர வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியைப் பிடித்தார். அவரது தாய் ரக் தாய் கட்சி மொத தம் 500 இடங்களில் 399 தொகு திகளில் வெற்றி பெற்று தனித்து ஆட்சியை பிடித்தது.

ஒரு பிரதமர் 2- வது முறை யாக ஆட்சியைப் பிடிப்பது தாய் லாந்து வரலாற்றில் இதுவே முதல் முறை ஆகும்.பிரதான எதிர்க்கட் சியான சனநாயக கட்சி தோல்வியை ஒப்புக் கொண்டது. அந்தக் கட்சி 80 இடங் களில் மட்டும் வெற்றி பெற்றது.

## நியூசிலாந்தில் சூறாவளி கரையோர கட்டடங்கள் சேதம்

நியூசிலாந்து நாட்டின் புக்தீவுப்பகுதியில் கடற்கரை யோரப் பகுதியில் நேற்று முன்தினம் சூறாவளி வீசியதால் கடற்கரைப்பகுதிகள் பலத்த சேதமடைந்துள்ளது.

மணிக்கு 245 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய இந்த சூறாவளியினால் கடற் கரையோரத்திலிருந்த கட்டடங்கள் இடிந்து விழுந்தன. மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டதால் ஒன்பது மீற்றர் உயரத்திற்கு எழுந்து இராட்சா அலைகள் அசுர வேகத்தில் அடித்துள்ளன.

இதன் காரணமாக உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்பட்டதாக தெரியவரவில்லை.

# அடிப்படை வசதிகள் வழங்கப்படாமையால் முத்துஜயன்கட்டு மக்கள் அவலம்!

## அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுகை

முத்துஜயன்கட்டு கிராமம் அடிப்படை வசதிகள் குறைந்த நிலையில் பல சிரமங்களை எதிர்கொண்டு வருவதனை அவதானிக்க முடிகிறது.

சுமார் 1000 குடும்பங்களைக் கொண்டதான மேற்படி கிராமத்திற்கு நிரந்தர மருத்துவமனை இல்லை. கடந்த சில ஆண்டுகளாக இயங்கி வந்த ஆயுர்வேத மருத்துவமனையும் அங்கிருந்து வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால் முத்துஜயன்கட்டுப் பகுதி மக்கள் மருத்துவத் தேவைக்காக பல கிலோ மீற்றர்கள் பயணம் செய்தே மருத்துவத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய பரிதாபநிலை காணப்படுகிறது.

அடுத்ததாக இக்கிராமத்தில் இருந்து ஏனைய பகுதிகளிற்கு செல்வதற்கான பேருந்து போக்குவரவுப் பணி கடந்த சில மாதங்களாக சீரான முறையில் நடைபெறுவது இல்லை. இதனால், இப்பகுதிக்குச் செல்லும் அரச ஊழியர்கள் மற்றும் பிரயாணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக. பாடசாலை ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். அடுத்து இப் பகுதிக்குரிய அனைத்து வீதிகளும் மோசமான முறையில் சேதமடைந்துள்ளன. இதனை, திருத்தித்தர எவரும் முன்வருவதாகத் தெரியவில்லை என கிராமவாசி ஒருவர் மனவருத்தத்துடன் தெரிவித்தார். இப் படிப்பட்ட அடிப்படை வசதிக்குறைவுகளால் சிரமப்படும் முத்துஜயன் கட்டு கிராமத்தை அபிவிருத்தி செய்ய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அப் பகுதி மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

(து)

-மட்டு.மண்முனைப் பிரதேச மக்கள்-

# அரசு சுனாமி நிவாரணம் வழங்காமைக்கு எதிராக வீதி மறியல் போராட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட தேற்றாத்தீவுப் பிரதேசமக்களால் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட தமக்கு அரசாங்க நிவாரணம் வழங் கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

காலை 8.30 தொட க்கம் 11.00 மணி வரை நடத்தப்பட்ட இந்த ஆர்ப் பாட்டத்தில் 300 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதாக களுவாஞ்சிக் குடி பொலிஸ் நிலையப்பதில் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டங் காரண மாக மட்டக்களப்பு, கல்முனை நெடுஞ்சாலையில் சில மணி நேரங்களுக்கு வாகனப் போக்குவரத்து தடைப்பட்டிருந்ததாக பொ லிசார் தெரிவித்துள்ளனர்.

பொலிசாரும் விசேட அதிரடிப் படையினரும் பிரதேச செயலாளர் மற்றும் அதிகாரிகளும் மக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பிரதேச செயலாளர் கே.பாஸ்கரன் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உடனடி நிவாரணம் வழங்கப்படும் என உறுதிமொழி வழங்கியதையடுத்து மேற்படி போராட்டம் கைவிடப்பட்டது.

# சுனாமியில் சேதமடைந்த படகுகளின் ஒரு தொகுதி திருத்திக் கையளிப்பு

**(அலுவலக செய்தியாளர்கள்)**

**சுனாமி பேரலை அனர்த்தத்தினால் தொழில் உபகரணங்களை இழந்த முல்லைத்தீவு மீனவர்களின் சேதமான சில படகுகள், இயந்திரங்கள் திருத்தம் செய்யப்பட்டு நேற்று முன்தினம் மீனவர்களிடம் கையளிக்கப்பட்டது.**



சுனாமிப் பேரலையினால் முற்றாக அழிவுக்குள்ளான முல்லைத்தீவில் மீனவர்களின் தொழில் உபகரணங்களும் முற்றாக அழிவுக்குள்ளான நிலையில் சிறிய அளவிலேனும் தொழில் செய்ய முடியாமலிருந்த மீனவர்களின் சில படகுகள் திருத்தம் செய்யப்பட்டு அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் ஆதரவில் லண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலய நிதியுதவியுடன் தமிழ் தகவல் தொழில் நுட்பவியலாளர்களின் ஒருங்கமைப்பில் இலவசமாக இப்படகுகள் திருத்தம் செய்து கையளிக்கப்பட்டன. இப்படகுகளுக்குரிய இயந்திரங்களின் திருத்தத்திற்காக ஒவ்வொன்றுக்கும் சுமார் 10 ஆயிரம் தொடக்கம் 25 ஆயிரம் வரை செலவில் திருத்தம் செய்யப்பட்டன.



இவற்றைக் கையளிக்கும் முகமாக ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வானது நேற்று முன்தினம் பிற்பகல் 4.00 மணியளவில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட படகுதிருத்தும் நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பொதுச்சுடரினை முல்லைத்தீவு செயலணிக்குழுப் பொறுப்பாளர் ஈழமாறன் அவர்களும், தமிழர் புனர்வாழ்வுக்கழக முல்லை மாவட்டப் பொறுப்பாளரும் தமிழர் புனர்வாழ்வுக்கழக முல்லைத்தீவு அவசரகாலப்பணி பணிப்பாளரும் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றினார்.

தகவல் தொழில் நுட்பவியல் கல்லூரியைச் சேர்ந்த நவஜீவனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் சிறப்புரையினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் நிகழ்த்த, தொடர்ந்து கடற்புலிகளின் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த மூர்த்தி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து திருத்தம் செய்யப்பட்ட படகுக்கான படிவத்தினை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியராசா மீனவர்களுக்கு வழங்கினார். தொடர்ந்து இயந்திரத்திற்கான படிவத்தினை முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் செல்வன் வழங்கினார்.

(ச.8)

# முல்லை பாடசாலை மாணவருக்கு மருத்துவ பரிசோதனையும் சிகிச்சையும்

முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின் ஒழுங்கு படுத்தலில் முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான விசேட மருத்துவ பரிசோதனையும் சிகிச்சையும் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு வைபவரீதியாக ஆரம்பமானது.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வைத்தியர் வைத்திய கலாநிதி இளஞ்செழியபல்லவன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் வைத்திய ஆலோசனைகளை முல்லை.மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா வழங்கினார். கருத்துரையினை கடற்புலிகளின் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் மா.ரங்கன் வழங்கினார்.

பரிசோதனையை யாழ்ப்பாண மருத்துவர்கள், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் ஆகியோர் வருகை தந்து மேற்கொள்கின்றனர், இவர்களுடன் முல்லை மாவட்ட வைத்திய அதிகாரி பணிமனைப் பணிப்பாளர்களும் இணைந்து பாடசாலைகளில் மேற்கொண்டு வருகின்றனர் இவர்களுக்கான மருத்துவ வசதிகளை வேள்ட்விசன் மேற்கொண்டு வருகின்றது. மாணவர்களுக்கு சிகிச்சையுடன் மருத்துவ ஆலோசனைகளும், பற்பசை, பற்தூரிகைகளும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(20)




குடிநீர் விநியோகப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு சிங்கர் சிறிலங்கா லிமிட்டெட்டினால் இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்கள் கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திடம் அண்மையில் கையளித்ததை படத்தில் காணலாம்.

(படம் : சோதி)



# தியாக தீபம் திலீபன் மருத்துவமனை பிரமந்தனாறு பகுதியில் திறப்பு

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நிலையம் பிரமந்தனாறு கிராமத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவின் தியாக் தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வானது, சிறப்பு மருத்துவப்போராளி நா.வண்ணன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பொதுச் சுடரினை பிரமந்தனாறு மகாவித்தியாலய அதிபர் ஏற்றிவைத்தார். தேசியக்கொடியினை மருத்துவப் போராளி தமிழ்வாணன் ஏற்றி வைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து ஈகச்சுடரினை மருத்துவமனை சிறப்பு மருத்துவப்போராளி திருமதி. காயத்திரி திலீபன் மருத்துவ சேவை பொறுப்பாளர் செ.நாயகன், மயில்வாகனபுர அ.த.க. பாடசாலை அதிபர் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து தியாக தீபம் திலீபன் அவர்களின் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை மாவீரரின் தந்தையான பாலசுந்தரமும் போர்ப் பயிற்சி ஆசிரியர்நேசனும் பிரமந்தனாறு மாதர் சங்க தலைவியும் அணிவித்தனர். இதனைத் தொடர்ந்து மருத்துவமனை பெயர்ப் பலகையினை நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன நிறை வேற்றுப் பணிப்பாளர் திரைநீக்கம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மருத்துவமனையினை திலீபன் மருத்துவசேவை மருத் துவ ஆலோசகர் வைத்தியகலாநிதி திருமதி. எழுமதி கரிகாலன் நாடாவை வெட்டித் திறந்துவைத்து நோயாளர்களைப் பார்வையிட்டார். தொடர்ந்து சிறப்புரைகள் இடம் பெற்றன. இதில் பிரமந்தனாறு மகாவித்தியாலய அதிபர், நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன நிறைவேற்றுப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி. எழுமதி கரிகாலன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். அதனைத் தொடர்ந்து பாடசாலை ஆசிரியர் திருமதி அரியநாயகத்தின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன. இந்நிகழ்வில் கிராம பிர முகர்கள், மக்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போராளிகள் போன்றோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பகிடிவதைகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

### -யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

**யாழ்.பல்கலைக்கழகத்தில் புதுமுக மாணவர்கள் மீது பகிடிவதைகள் தொடர்வதாக பல்வேறு தகவல்கள் எமக்குக் கிடைக்கப்பெற்று வருகின்றன. இந்த நிலையில் பகிடிவதைகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.**

பல்வேறு பாதிப்புக்களின் மத்தியில் தமது உயர் கல்வியைத் தொடர வேண்டும் என்ற இலட்சியத்துடன் பல்கலைக்கழகத்துக்குள் நுழையும் மாணவர்கள் மீது. பகிடிவதை என்கின்ற விரும்பத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை மாணவர்கள் நிறுத்த வேண்டும். இயற்கை அனர்த்தத்தினால் உடமைகள் இழந்து உறவினர்களின் உயிர்களைப் பறிகொடுத்து மனரீதியாக பல்வேறு பாதிப்புக்குள்ளாகிய நிலையில் பலமாணவர்கள் பல்கலைக்கழகப் படிப்புக்காக கால்பதிக்கும் வேளையில் நாகரிகமற்ற செயற்பாடாகவே இந்தப் பகிடிவதை அமையும். அத்தோடு ஒரு சில பல்கலைக் கழக மாணவர்களினால் மேற்கொள்ளப்படும் பகிடிவதை என்கின்ற அநாகரிகமான செயற்பாட்டினால் ஒட்டுமொத்தமான பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்தினுடைய நற்பெயருக்கும் களங்கம் ஏற்படுகின்ற நடவடிக்கையாகவே இந்தப் பகிடிவதை அமைகின்றது.

இதனையும் மீறி பகிடிவதைகளில் மாணவர்கள் ஈடுபட்டால் அவர்கள் மீது பல்கலைக்கழக நிர்வாகம் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் நாம் பூரண ஒத்துழைப்பினை வழங்குவோம். அத்தோடு பகிடிவதைகளில் ஈடுபடுகின்ற மாணவர்கள் தொடர்பான தகவல்களை பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், ஏனைய ஊடகங்கள் எமக்கு அறியத் தருமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். சமூகத்தினால் விரும்பத்தகாத பகிடிவதை என்ற செயற்பாட்டினைத் தொடர்ந்தும் பல்கலைக் கழகத்துக்குள் நாம் அனுமதிக்கப் போவதில்லை. ஆகவே இந்த நடவடிக்கையினை முற்றாக நிறுத்துவதற்கு சகல வழிகளிலும், சகல தரப்பினரிடமிருந்தும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாகிய நாம் ஒத்துழைப்பினை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

புதிய மாணவர்களை அன்போடு வரவேற்கும் மாணவர் ஒன்றியமாகிய நாம் தங்கள் மீது யாராவது பகிடிவதை செயற்பாட்டினை மேற்கொண்டால் இது தொடர்பாக எமது மாணவர் ஒன்றியத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும், அவ்வாறான பகிடிவதை செயற்பாட்டிற்கு எதிராக மாணவர் ஒன்றியம் உடனடி நடவடிக்கை எடுக்கும் என்றும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிவிப்பில் கேட்டுள்ளது. (33)

-கடந்த ஆறு மாதத்தில் மன்னாரூடாக-

# கடத்தப்பட்ட 75 மி.ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள் பிடிபட்டன

கடந்த வருடம் இறுதி ஆறு மாதத்திலும் மன்னாரின் ஊடாக கடத்தப்பட்ட 75 மில்லியன் பெறுமதியான போதைப் பொருட்களை மன்னார் வவுனியா பொலிசார் கைப்பற்றி இருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். அதிரடி நடவடிக்கைகள் காரணமாக தற்போது வவுனியா, மன்னார் பிரதேசங்களில் போதைப் பொருள் பெருமளவாக கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகவும் போதைப் பொருள் கடத்தும் நடவடிக்கையில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக வும் நான்கு மிக முக்கிய கடத்தல் களை மன்னார் பொலிசார்பிடித்த தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குறைந்த விலையில் சிற்றூர்திகள் கிடைக்க இறக்குமதி வரியை அரசு குறைக்க வேண்டும்

### -யாழ். மாவட்ட தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கப் பொறுப்பாளர்

(நல்லூர்)

சிறிலங்கா அரசாங்கம் சிற்றூர்திகளுக்கு அறவிட்டுவரும் இறக்குமதி வரி 60 வீதத்தை வடபகுதிக்குக் கொண்டுவரும் சிற்றூர்திகளுக்குக் குறைக்க வேண்டும். இதன் மூலம் குறைந்த விலையில் வடபகுதி மக்களுக்கு சிற்றூர்திகளை வழங்க முடியும்.

இவ்வாறு யாழ். மாவட்ட தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கத்தின் பொறுப்பாளர் சு.பாலையா குறிப்பிட்டார்.

சுன்னாகம் தனியார் பேருந்து நிலையக் கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் வலி தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி. சு. சொக்கலிங்கம் தலை மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய சு. பாலையா இங்கு வருகைதந்துள்ள இலங்கை தனியார் சிற்றூர்தி சங்கத் தலைவர் கெமுனு விஜயரெட்ணா அவர்கள் தனது உரையின் போது வட பகுதிக்கு வரும் சிற்றூர்திகளுக்கான வரியை புலிகள் ரத்துச் செய்ய வேண்டும் அதன் மூலம் குறைந்த விலைக்கு வடபகுதி மக்கள் சிற்றூர்திகளைப் பெறமுடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக இரண்டு அரசுகள் என்ற நிலையில் இருந்து சமமாக வரியைப் பற்றிப் பேச வேண்டும். தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினர் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அளப்பெரும் பங்களிப்பைச் செய்துள்ளார்கள். 90ஆம் ஆண்டில் அரச பேருந்து சேவைகள் சேவையில் ஈடுபடாத போதிலும் இவர்களே தமது வாகனங்களுக்கு மண்ணெண்ணையைப் பயன்படுத்தி தமது சேவையைச் செய்துள்ளார்கள் எனவும் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. கணேஷ் உரையாற்றும் போது, மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் பாதுகாப்பான சேவையை தனியார் சிற்றூர்திச் சேவையினர் வழங்க வேண்டும். வடக்கு-கிழக்கு மாகாண சபை முழுமையாக இயங்காத நிலைமையிலேயே தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட தலைவராக அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்பட்டுள்ளேன்.

சிறந்த சேவையை மக்களுக்கு சிற்றூர்திச் சங்கத்தினர் வழங்க வேண்டும். இதன் மூலம் மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மற்றும் இலங்கை தனியார் சிற்றூர்திச் சங்கத் தலைவர் கெமுனு விஜயரெட்ணா, யாழ். மாவட்ட போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.(41)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவரின் கல்வி நிலை வழமைக்குத் திரும்ப நீண்ட காலம் எடுக்கும்

### மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

(திருகோணமலை)

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேச மாணவர்களின் கல்விநிலை வழமைக்குத் திரும்ப நீண்டகாலம் எடுக்குமென வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இரா.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நேரில் சென்று நிலவரத்தை ஆராய்ந்த பின்பு இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

சேதமடைந்த பாடசாலைகளில் 50 சத வீதமான பாடசாலைகள் கடல் எல்லையிலிருந்து 100 மீற்றருக்குள் அமைந்துள்ளதால் இப் பாடசாலைகளை வேறு இடங்களுக்கு மாற்றவேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

இவற்றை நிறைவேற்றுவது தொடர்பாக மாகாணக் கல்வி அமைச்சு சில நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது. குறிப்பாக கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர், காரைதீவு ஆகிய பிரதேசங்களில் அரசாங்கக் காணிகள் இல்லை. அது மட்டுமன்றி தனியாரிடமிருந்து பாடசாலை அமைப்பதற்குத் தேவையான காணியைப் பெறுவதென்பது மிகச் சிக்கலான விடயமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது பாடசாலைகளைப் பொறுத்த வரை சில பாடசாலைகளில் அகதி முகாம்கள் இருந்தாலும், அப் பாடசாலைகள் இயங்குவதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாணவர் வரவு 60 வீதம் முதல் 70 வரையே காணப்படுகின்றது. இதனை அதிகரிப்பதற்கு கல்வித் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

மாணவர் வரவில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்குக் காரணம் உள ரீதியாக ஏற்பட்டுள்ள தாக்கம், சீருடையின்மை, பாடசாலை உபகரணங்கள் இன்மை மற்றும் நிலையான வதிவிடமின்மை ஆகியனவாகும் என்றும் அவர் இதுபற்றி மேலும் தெரிவித்துள்ளார்.

# 20 முன்பள்ளிகளைக் கட்டிக் கொடுக்க ஐ.நா.சிறுவர் பாதுகாப்பு நிதியம் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கிய சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் முன் பள்ளிகளை அமைத்துக் கொடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன் வந்துள்ளது.

இதனடிப்படையில் முதற் கட்டமாக வடமராட்சி வடக்குப் பிரதேசங்களில் 20 முன்பள்ளிகளை அமைத்துக் கொடுக்க ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச சிறார்களின் கல்வி நல மேம்பாடுகளைக் கவனத்தில் கொண்டே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(33)

### தனியார் சிற்றூர்திகளின் பயன்பாட்டிற்கு

# தனியான எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கத் திட்டம்

(நல்லூர்)

யாழ்.மாவட்ட தனியார் சிற்றூர்திகளின் பயன்பாட்டிற்கென தனியான எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று அமைக்கப் படவுள்ளது.

இத்தகவலைச் சுன்னாகம் தனியார் சிற்றூர்தித்தரிப்பிட கட்டடத் திறப்பு விழாவிற்கு வருகை தந்த இலங்கை சிற்றூர்திச் சங்கத் தலைவர் கெமுனுவிஜயரெட்ணா தெரிவித்துள்ளார்.

தனியார் சிற்றூர்திகளுக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கான அனுமதி நிதியமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது. நிதியமைச்சின் செயலாளர் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதனால் காலம் பிந்துகின்றது.

அடுத்த இருமாதங்களில் இவ் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

(41)

# 1200 மாணவருக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

திருகோணமலை மாவட்டத்தில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மாணவர்களில் சுமார் 1200 பேருக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகளை கனேடிய சர்வதேச உதவிச்சங்கத்தின் நிதி உதவியுடன் வழங்கும் பணியை திருகோணமலை மாவட்ட முன்னேற்றச் சங்கம் நேற்று முன்தினம் ஆரம்பித்தது. திருகோணமலை நகரிலுள்ள விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கற்கும் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட சுமார் 240 மாணவர்களுக்கு கற்றல் உபகரணப் பொதிகள் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வில் விநியோகிக்கப்பட்டன. நிகழ்வுக்கு மகாவித்தியாலய அதிபர் என்.இராஜநாதன் தலைமை வகித்தார். முதலாவது பொதியை ஒருமாணவனுக்கு வழங்கி விநியோகத்தை திருகோணமலை மாவட்டத் தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் புரட்சி தொடக்கி வைத்தார். கனேடிய சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (CIDA) இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக பத்து இலட்சம் ரூபாவை திருகோணமலை மாவட்ட முன்னேற்றச் சங்கத்துக்கு வழங்கியுள்ளது. மூதூர் பிரதேசத்தில் ஈச்சிலம்பற்று, புன்னையடி, இலங்கைத்துறை முகத்துவாரம், சீனன்வெளி, உப்பூறல் மற்றும் திருமலை நகரத்தில் உள்ள பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. பாடசாலைப்பை ஒரு மாணவனுக்குத் தேவையான அப்பியாசக்கொப்பிகள், பேனா, பென்சில் மற்றும் கற்றல் உபகரணங்கள் வைக்கப்பட்டு வழங்கப்படுகிறது. ஒன்றின் பெறுமதி சுமார் 750 ரூபா என்று தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் திருமலை மாவட்ட முன்னேற்றச் சங்கத்தின் செயலாளர் ப.கந்தசாமி, நிர்வாக அதிகாரி சிவமூர்த்தி, சிறுவர் செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் துஷ்யந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(25)

# மெய்வல்லுநர் போட்டிகளை யாழ்.இல் எளிமையாக நடாத்த முடிவு

யாழ். குடாநாட்டிலுள்ள பாடசாலைகளின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகளை இவ்வாண்டு மிகவும் எளிமையான முறையில் கொண்டாடுவது என கல்வித் திணைக்கள அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

சுனாமியால் பாதிக்கப்புட்ட யாழ். குடாநாட்டில் களியாட்ட நிகழ்வுகளும் அவசியமற்ற கொண்டாட்டங்களும் தவிர்க்கப்பட வேண்டியன என்ற நிலைப்பாடு காணப்படுவதினாலேயே இம் முடிவினை கல்வித் திணைக்கள அதிகாரிகள் எடுத்துள்ளனர். (33)

# 31-01-2005-06-02-2005




**31.**

* சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட திருமலை தொடரூந்து நிலைய ஊழியர்களின் குடும்பத்தினர் தங்களுக்கு அரச நிவாரண உதவி ஒரு மாதகால மாகியும் வழங்கப்படாததைக் கண்டித்து தொடரூந்து தண்டவாளத்தின் குறுக்காக அமர்ந்திருந்து மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

* வலி வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களுக்குப் பதிலாக வேறு காணிகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தெரிவிப்பு.

* அம்பாறை-திருக்கோவில் பிரதேச சுனாமி அனர்த்த நிவாரண குழுக்கூட்டத்தில் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்கள் நுழைந்தமையால் விடுதலைப்புலிகள் அங்கிருந்து வெளியேறினர்.

**01**

* தொண்டமனாறு கெருடாவில் பகுதியில் இடம் பெற்ற வீதி விபத்தில் இருவர் மரணம்.

* சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளவளத் துணை ஒருங்கிணைப்புக் குழு ஒன்று கூடல் நிகழ்வு விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்றது.



* எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனை நோர்வேயில் சந்தித்து சுனாமி நிவாரணம் குறித்து ஆராய்வு.

கிறிஸ்தவ விவகார அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ யாழ்.விஜயம்.

* அம்பாறை மாவட்ட அரசியல் துறை போராளி இலக்கியன் அதிரடிப்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

* உடுப்பிட்டியில் இடம் பெற்ற வீதி விபத்தில் இருவர் பலி.

**02.**

* இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் புனரமைத்து மீளக்கட்டியமைக்க 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவையென உலக நிதி நிறுவனங்களான உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கி என்பன அறிக்கையொன்றை வெளியிட்டன.

* யாழ். சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயத்தின் ஆரம்பப் பாடசாலைக் கட்டடத் தொகுதியில் உள்ள வகுப்பறை ஒன்றின் கூரைப்பகுதி உடைந்து வீழ்ந்ததில் 15 மாணவர்கள் காயமடைந்தனர்.

* வவுனியாவில் அரசாங்க அதிபர் பணிமனையில் வட-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ சந்திப்பு. இதனை வன்னி கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவரும் புறக்கணித்தனர்.



* சுனாமி அனர்த்தத்தின் போது கல்முனைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட குழந்தையின் பெற்றோரை அடையாளம் காண்பதற்கு மரபணுப் பரிசோதனை நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

* தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், ஐ.நா.அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயப் பிரதிநிதிகள் சந்தித்து காவல் துறையினருடன் இணைந்த செயற்பாடுகள் தொடர்பாகவும், மனித உரிமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

* போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் படையினர்-புலிகள் சந்திப்பு. இதன் போது சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் படையினர் முழுமையான இயல்பு நிலையினை தோற்றுவிப்பதற்கான ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தனர்.

**03.**

* புலிகள் அமைப்பில் இணைந்த 18 வயதிற்கும் குறைவான 23 சிறுவர்கள் வட-கிழக்கு மனித உரிமைகள் செயலக பணிப்பாளர் வணபிதா கருணாரட்ணம் அடிகளாரிடம் கையளிப்பு.



* எதிர்க்கட்சித் தலைவர் ரணில் பிரஸ்லாப்சில் ஐரோப்பிய ஒன்றியத்தின் உப தலைவர் மாகே வொல்ஸ் டோவைச் சந்தித்தார். இதன் போது இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் நேரடியாகச் சென்றடைய வேண்டுமெனக் கூறப்பட்டது.

* வவுனியா தெற்கு தமிழ்ப்பிரிவின் புதிய பிரதேச செயலாளரை இடமாற்றக்கோரி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

* நெதர்லாந்தின் வெளிநாட்டு அமைச்சர் பேர்னாட் பொட்டை தமிழ்க்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் சந்தித்தனர். இதேவேளை இவர் சனாதிபதியையும் சந்தித்தார்.

**04.**

* சிறிலங்காவின் 57 ஆவது சுதந்திர தினத்தன்று தமிழர் தாயகம் எங்கும் கறுப்புக்கொடிகள் கட்டி துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.




* சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்குப் பகுதி மக்கள் மீது அரசு ஆதரவைக் காட்டவில்லையெனக் கூறி கிழக்கு கரையோரப் பிரதேசங்கள் பலவற்றில் ஜும்மா தொழுகையின் பின்னர் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



* வலிவடக்கில் இடம் பெயர்ந்த மக்கள் தம்மை சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியும், அரசினால் தொடர்ந்து அடக்கி ஒடுக்கப்பட்டு வருகின்றமையைக் கண்டித்து தெல்லிப்பழைப் பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டனர்.




* கிளிநொச்சியில் கட்டப்பட்டு வரும் நீர்த்தாங்கியின் உச்சியிலிருந்து பாரந்தூக்கியின் கோளாறினால் தவறி வீழ்ந்த ஒருவர் படுகாயமடைந்தார்.இவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டார்.



* முல்லைத்தீவு செயலணி வளாகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் சுனாமியால் இடம்பெயர்ந்த மக்களை விரைவில் இடைத்தங்கல் முகாம்களில் குடியமர்த்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.



* ஊர்காவற்றுறை கிழக்குத் தெருவில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்காப் பொலிசாரை அங்கிருந்து வெளியேறுமாறு கோரி அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**05.**

* பொதுக்கட்டமைப்பு ஒன்றை நிறுவுவது எவ்வளவு தூரம் சாத்தியப்பாடானது என்பதை தற்பொழுது எங்களால் கூற முடியாதுள்ளதென அரசியல்துறைப் பொறுப்பாளர் நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



* சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர்காலத்தில் செய்ய வேண்டிய உதவி நடவடிக்கைகளுக்கு எல்லோருடைய ஒத்துழைப்பையும் உற்சாகப்படுத்துகின்றோம் என இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் அரசியல்துறைப்பொறுப்பாளரைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் கூறினார்.

* சுனாமியின் முன்பும், பின்பும் போர் நிறுத்தம் ஒரே மாதிரியாகவே இருக்கிறது. அதில் மாற்றமில்லையென கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவர் வொகன் விங்கிள் அரசியல்துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பின் பின்னர் தெரிவிப்பு.



* திருக்கோவில் பிரதேச செயலகத்தில் உள்ள தேசியத் தலைவரின் படத்தை அகற்றி விட்டு அவ்விடத்தில் சனாதிபதியின் படத்தை வைத்தமையால் இராணுவத்தினருக்கும்-மக்களுக்குமிடையே முறுகல்.

* வடகிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் உளவளத்துணையினை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தாம் நிதியுதவியினை வழங்கவுள்ளதாக நோர்வே நாட்டின் இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் கிளிநொச்சியிலுள்ள மனித உரிமைகள், செயலகத்தில் நடத்திய உளவளதுணை தொடர்பான ஆலோசனையில் தெரிவிப்பு.



* கிறிஸ் நாட்டின் மருத்துவக் கப்பல் திருமலை வந்தடைந்தது.



* காங்கேசன்துறை வீதியில் தாவடிப் பகுதியில் இடம் பெற்ற வீதிவிபத்தில் சிறுமி பலி.

* கைதடி தச்சன்தோப்புப் பகுதியில் உழவு இயந்திரத்தின் விசிறி மீது தவறிவீழ்ந்து ஒருவர் பரிதாப மரணம்.

* முல்லைத்தீவில் சுனாமி பேரலையின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் உள்ள நலன்புரி நிலையத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் தங்கவைக்கப்பட்ட 58 குடும்பங்களுக்கு சேவாலங்கா நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட வீடுகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் பொறுப்பேற்கப்பட்டு கையளிக்கப்பட்டன.



**06.**

* சுனாமியால் உயிரிழந்தவர்களின் 05 சடலங்கள் திருமலை கரையோரம் ஒதுங்கின.

# வயிற்றுப் பசிபோக்கிய உறவுகளின் உயிரற்ற உடலைக் கண்டு கொதித்தோம்

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

பகுதி -19

முல்லைத்தீவுப் பகுதியை சுனாமி அலைகள் தாக்கி சுடுகாடாக்கிய சில நிமிடங்களில் அந்தப் பகுதிகளுக்கு நேரில் சென்று பின்னர் கடமை நிமித்தம் வேறு பகுதிக்குச் சென்று 27ஆம் திகதி முதல் மீட்பு நடவடிக்கைகளைப் பொறுப்பேற்று நடாத்திய தமிழீழ கடற்படைப் போராளி மோகன் தான் அந்தப் பகுதிகளில் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போது கண்ட காட்சிகள் என்ன அவரின் மன உணர்வுகள் எப்படி இருந்தது என்பவற்றை விபரிக்கின்றார்.

அ.லோகீசன்

**சம்பவம்** நடைபெற்ற நேரம் நான் கடமை நிமித்தம் முல்லைத்தீவு சென்றிருந்தேன். 8.45 மணி அளவில் வலையன் மடம் மாத்தளன் பக்கமாக கடல் குடியிருப்புப் பகுதிகளுக்குள் ஏறிவிட்டது என்ற தகவல் தொலைத்தொடர்பு கருவி மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாகவே நாங்கள் அந்தப் பகுதிக்கு போய் விட்டோம். நாங்கள் அங்கு போய்ச் சேர இரண்டாவது அலை அடித்துத் தண்ணி வந்து விட்டது. வலைகள், படகு கள் எல்லாம் தண்ணீரில் அடிபட்டு திக்குத் திக்காக கிடந்தன.

இந்த நிலையில் அலைக்குள் சிக்குண்ட வர்கள் எல் லோரும் ஆங் காங்கே இருந்து ஓடிக்கொண்டிருந் தார்கள். வலையன் மடம் சேச்சடியில் மீன் பிடி வலைகள் படகுகள் உட்பட மீன்பிடி உபகரணங்கள் எல்லாம் வந்து கரையொதுங்கியிருந்தன. சேச்சைப் பார்க்க வித்தியாச மான தோற்றத்தைத் தந்தது. நான் கடலிலி ருந்து 50 மீற்றர் தூரத்தில் நின்றேன. இப்படி இருக்க கடல் மூன்றாம் முறையும் பொங்கி எழுந்து வந்தது. இதைப் பார்த்த உடனே



நான் ஓட ஆரம்பித்து விட்டேன்.

என்னால் ஓடவே முடியாமலிருந்தது. கஞ்சல்கள், குப்பைகள் எல்லாம் சுற்றி வந்து விட்டது. இதனைத் தவத்திக் கொண்டு 25 மீற்றர் தூரம் வரவில்லை கடல் முழங்கால் மட்டத்துக்கு வந்து விட்டது. இப்படியே அந்தப் பகுதியில் இருந்தவர்களைப் பாதுகாப்பாக அனுப்பிக் கொண்டிருந்தேன். இந்த நிலையில் எங்களுக்கு மீண்டும் தகவல் வருகிறது. முல்லைத்தீவு ஆஸ்பத்திரி வரைக்கும் தண்ணி ஏறி வந்துவிட்டது. கனபேர் செத்து விட்டார்கள்.ஒருத்தரையும் மீட்க ஏலாமல் கிடக்குது. என்ற தகவல் எங்களுக்கு வருகிறது. இப்படி இருக்க நாங்கள் முல்லை நகருக்கு வருவதற்கு தயார் ஆகிவிட்டோம். உடனடியாக வேறு படையணிகள் எல்லாம் உரிய இடத்துக்கு வந்து சேர்ந்திருந்தனர்.. இந்த நிலையில் நான் வேறு ஒரு வேலைக்கு சென்று விட்டேன்.

அடுத்த நாள் காலை மீட்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி மேற் கொள்வதற்காக முல்லைத்தீவு நோக்கி வந்து கொண்டிருந்தேன். வட்டுவாகல் பாலத்தால் சின்னத்தங்காடு நோக்கி வந்தேன். கடல் கிட்டவாகத் தெரிந்தது. வீதி எங்கும் கஞ்சல்களால் நிறைந் திருந்தது. வீடுகள் எல்லாம் இடிந்து போய் இருந்தன. இப்படியே சின்னத்தங்காட்டுப் பாலத்தை சென்றடைந்த போது பாலம் பெரும் கிடங்காக இருந்தது.

செந்தளிர் கட்டடம் இருந்த இடம் தெரியா மல் இருந்தது. அதையும் தாண்டி வந்தபோது முல்லைத்தீவு பள்ளிக்குடம் சிதைந்து போய் தளபாடங்கள் எல்லாம் வீதிவீதியாகக் கிடந்தன. இப்படியே முல் லைத்தீவைச் சென்றடைந்து மீட்பு நடவடிக் கையை ஆரம்பித்தோம்.

முல்லைத்தீவைப் பார்க்கின்றபோது கற்குவியலாக இருந்தது. இத்தனை நாட் களாக நாங்கள் ஓடித்திரிந்த முல்லைத் தீவின் தோற்றம் ஒரு சில நிமிடங்களில் தகர்ந்து போய் ஒரு சூனியமாகக் காட்சி தந்தது கடற்கரையில் இருந்த றோட்டைக் காணவில்லை. வாடி களைக்காணவில்லை, சேச்சைக் காணவில்லை. கடற்கரையில் நான்கடி உயரத்தில் இருந்த கிணறு மணல் அரிக்கப்பட்டு பத்தடிக்கு அதிகமான உயரத்தில் இருந்தது. கடல் 50மீற்றர் தூரத் துக்கு மேல் உள்ளே வந்திருந்தது.

இப்படியே நாங்கள் எங்கள் பணியை ஆரம்பிக்கின்றோம். அனைத்துப் பிரிவுகளுக்கும் ஒவ்வொரு பகுதி பகுதிகளாக பிரித்துக் கொடுத்திருந்தோம். மீட்பு அணிகளை அனுப்பியசில நிமிடங்களில் அனைத்து அணிகளும் பதினைந்து சடலங்கள் எடுத்திருக்கிறோம். கட்டட இடிபாடுகளுக்குள் சடலங்கள் இருக்கிறது என்றெல்லாம் தகவல் அனுப்பிக்கொண் டிருந்தார்கள். உடனடியாக கைவசம் இருந்த உழவு இயந்திரங்களை அனுப்பி னோம். அனுப்பிய சொற்பநேரத்தில் அனைத்து உழவு இயந்திரங்களும் சட லங்களை நிறைத்தபடி வந்து நின்றன. நாங்கள் இப்படி எதிர்பார்க்கவேயில்லை.



இப்படியாக முதல் இரண்டு நாட்களும் எடுத்த சடலங்கள் அடையாளங் காணக் கூடியதாக இருந்தது. இரண்டாவது நாள் முல்லைத்தீவு ஆஸ்பத் திரிக்கும் நகருக்கும் இடையில் இருந்த இடம் கடல் நீரால் நிறைந்திருந்தது. அதனுள் மீட்பு நடவடிக் கைக்காக மகளிர் படைப்பிரிவை ஈடுபடுத் தியிருந்தோம். அவர்கள் இடுப்பளவு தண்ணீருக்குள் மெதுமெதுவாக நகர்ந்து பெருமளவான சடலங்களை எடுத் திருந்தார்கள். அதற்குள் அவ் வளவு சடலங்கள் இருக் கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை..



எங்களால் மீட்கப்பட்ட பெரு மளவான சடலங் கள் முட்கம்பி களாலும், கருக் குமட்டைகளாலும் கிழிக்கப்பட்ட பெரும் காயங களுடனும், ஆடை கள் இல்லாமலும் தான் இருந்தன.

ஒவ்வொரு சடலத்தையும் எடுக்கின்ற போது எங்களுக்கு நெருப்பில் எரிவது போல இருந்தது. அந்தளவு வேதனையாக இருந்தது. நீண்ட காலமாக எங்களுடன் உவாடி உணவு உண்டு எங்களின் வயிற் றுப்பசியையும் களைப்பையும் நீக்கிய உறவு களை உயிரற்ற உடல்களாகக் காண்பது எவ்வளவு வேதனையானது.

முல்லைத்தீவில் பனை வடலிகள் காடு போல பல இடங்களில் சடைத்து வளர்ந் திருக்கின்றன. அதனுள் எவராலும் செல்ல முடியாத அளவுக்கு அவை சடைத்திருக் கின்றன. அந்த வடலிக்குள் சடலங்கள் கிடந்தன. அவற்றை எப்படி எடுப்பது பெரும் சிரமப்பட்டு ஒவ்வொரு பனையாக டோசர்கள் மூலம் பிடுங்கி எடுத்து சடலங் களை எடுத்தோம். ஒரு கட்டத்தில் பனை வடலிகளுக்கு நடுவில் ஒரு தாயின் சடலம் இருந்தது. அதை எடுத்த பிறகு பார்த்தால் அதற்கு கீழ் இரண்டு சின்னப்பிள்ளை களின் சடலங்கள் இருந்தன. அந்தத் தாயின் பிள்ளைகளாக இருக்க வேண்டும். தாயுடன் அடிபட்டு .வந்து அப்படியே இறந்து போய் விட்டார்கள்.

இப்படி ஒவ்வொரு கட்டடங் களுக குள்ளும் மரங்களின் கீழும் பற்றை களுக்குள்ளும் ஆக எல்லா இடமும் மக்களை உயிரற்ற உடல்களாக எடுத் தோம். வெளிப்பகுதிக்குள் மீட்பு நடவடிக்கை நடை பெற்றுக் கொண்டிருந்த அதே சமயம் இறால் குளத் திலும், மீட்புப் பணி ஆரம்பமாகி இருந் தது. இறால் குளத் தில் நாங்கள் வலை வீசி இறால் பிடித்து சாப்பிட்ட அந்தக் குளத் தில் எங் கள் மக்களை குழந்தை கள், சிறுவர்கள், பெண்கள் ஆண்கள் என எல்லோரையும் குவியல் குவியலாக எடுத்துக் கொண் டிருந்தோம்.

இறால் பிடிக்கின்றபோது பிடிக்கப் பிடிக்ககுறையாமல் இறால் வந்தது போல எங்கள் மக்களின் உடல்களை எடுக்க எடுக்க குறையாமல் வந்து கொண்டே இருந்தன. அந்தளவுக்கு இறால் குளத்தில் சடலங்கள் குவிந்திருந்தன. கடலில் வலைவீசி மீன் பிடித்த மக்களை இறால் குளத்தில் பிடிக்க வேண்டியதாக இருந் தது.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தது. சட லங்கள் ஊதிப் பெருத்து அழுகிய நிலை யில் இருந்தது. எப்படி அகற்றுவது எங்கு பிடித்துத் தூக்கியும் பிய்ந்து விழுந்து கொண்டிருந்தது. இந்த நிலையில் அவற்றை அகற்ற முடியாத நிலை உரு வானது. எங்கள் மக்களை இப்படிக் காண் போம் என்று நாங்கள் ஒரு போதும் நினைக்கவே இல்லை என்று அந்தப் பயங் கரமான மீட்பு அனுபவத்தை நிறுத் தாமல் கூறிக் கொண்டே போனார் அந்தக் கடற்படைப் போராளி.

குடும்பத்தினரை வண்ணாங்குளம் பகுதியில் உள்ள தனது வீட்டில் விட்டு விட்டு புதுக்குடியிருப்புக்குச் சென்றிருந்த வேளை, முல்லைத்தீவை சுனாமி அலைகள் தாக்கிய செய்தி அறிந்து தனது வீட்டுக்கு எவ்வாறு சென்றடைந்தார்? அவரது வீடு எப்படி இருந்தது? அவர் அங்கு கண்ட காட்சிகள் என்ன? குடும்பத் தினர் என்ன ஆனார்கள்? என்பது பற்றிய விடையங்களை அடுத்த பகுதியில் தரு கின்றோம்.

தொடரும்

# நினைவஞ்சலியும் ஆண்டுத் தின அழைப்பும்



மண்ணில் 26 12 1948

விண்ணில் 22 01 2004

அன்னை நாட்டுப்பற்றாளர்

## பொன். விநாயகமூர்த்தி

### திதி 09-02-2005

அன்று நடைபெற இருக்கும் ஆண்டுத் துவச நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் எமது அன்பான தமிழீழ நெஞ்சங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அற்றைத் திங்கள் அவ் வெண்நிலவில்
எந்தையும் உடையோம் இனிதே வாழ்ந்தோம்,
இற்றைத் திங்கள் இவ் வெண்நிலவில்
எந்தையும் இலமே; துயர்கடல் ஆழ்ந்தோம்
எம் குலவிளக்கு அணைந்து ஓராண்டு நிறைவாம்
நினைக்கவே நெஞ்சம் மறுக்கின்றதே நேற்றுப் போல்
தோற்றும் நினைவுகள் நோயுற்ற போதும் கனிவுடனே
பேசியும், கலகலப்பாய் கதைத்தும் கலங்காத உணர்வுடன்
தந்தையாய், தலைவனாய், தொண்டனாய், தோழனாய்
திகழ்ந்த உந்தன் திருக் கோலம் நெஞ்சில் பசுமையாய் - இன்றும்
திரைப்படமாய் தெரிகிறது. ஓராண்டென்ன ஓராயிரம்
ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் எம் விடிவிளக்கே
நீங்கள் சாகவில்லை, இன்றும் வாழ்கின்றீர் எம்மோடு
மண்ணை விட்டு பிரிந்தாலும் எம் மனங்களிலே
நிறைந்தே இருக்கின்றீர் - எம் கண்ணை விட்டு
மறைந்தாலும் எம் நெஞ்சில் நிலைத்தே வாழ்கின்றீர்
இவ் ஓராண்டு நிறைவிலே எம் இதய தெய்வத்தின்
ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவன்
தாள் பணிந்து தொழுது இறைஞ்சி பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(5705) எம் பணி உமது வழி நடப்பதே எமது கடன். குடும்பத்தினர்

# "நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக"





கரைச்சி

புளியம் பொக்கணை
நாகதம்பிரான் ஆலய
வருடாந்த ஆண்டுற்சவ பங்குனி உத்தர
பொங்கல் விழா 25 - 03 - 2005

சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமும்
புதிய நிர்வாகத் தெரிவுக்குமான
அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவ பங்குனி உத்தர பொங்கல் விழா ஒழுங்குகள் சம்பந்தமான ஆலோசனைக்கூட்டமும் அதனைத் தொடர்ந்து அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான பரிபாலனசபைக்கான புதிய நிர்வாகத் தெரிவும் ஆலய போஷகரும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருமான உயர் திரு.தி.இராசநாயகம் அவர்கள் தலைமையில் 11.02.2005 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும் தயவு செய்து கிளிநொச்சி மாவட்ட அனைத்து திணைக்களத் தலைவர்களையும் அரச சார்பற்ற நிறுவனப் பொறுப்பாளர்களையும் விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்களையும் பொதுச்சபை உறுப்பினர்களையும், அடியார்கள், தொண்டர்கள் அனைவரையும் தவறாது கலந்து வேண்டியஆலோசனைகள் நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(சி.11316)

வீ.இராமநாதன்
தலைவர்

க.வைரமுத்து
செயலாளர்

# மொழி பெயர்ப்பாளர்கள் தேவை

01. தமிழ் மொழி ஆக்கங்களை ஆங்கில மொழிக்கும், ஆங்கில மொழி ஆக்கங்களை தமிழ் மொழிக்கும் மொழி பெயர்க்கக்கூடியவர்கள் தேவை.

மொழி பெயர்ப்புத்துறையில் அனுபவமுள்ளவர்களும், ஆர்வமானவர்களும் விரும்பத்தக்கது.

தகுதி அடிப்படையில் வேதனம் தீர்மானிக்கப்படும்

02. நிறுவன வேலைத்திட்டச் செயற்பாடுகளை அறிக்கைகளாகத் தொகுக்கக் கூடிய அனுபவம் வாய்ந்தவர்களும், நிறுவன வேலைத் திட்டச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உடனுக்குடன் செய்தித் தொகுப்பாக தயாரிக்கக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.

எதிர்வரும் 10.02.2005 அன்று முற்பகல் 11.00 மணிக்கும், 01.00 மணிக்கும் இடையில் கீழ்வரும் முகவரிக்கு ஆவணங்களுடன் நேரில் சமுகம் தரவும்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி.

(சி.11246)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி





| பிறப்பு | இறப்பு | பிறப்பு |
|---|---|---|
| 1967 . 12 . 22 | 2004 . 12 . 26 | 1999 . 02 . 25 |

**இராஜகுலசேகரம் பஞ்சவர்ணம்**

**இராஜகுலசேகரம் தர்சன்**

26.12.2004 அன்று சுனாமிப் பேரழிவினால் எமது நிறுவன சாரதியின் மனைவியும் மகனும் முல்லைத்தீவுப் பகுதியில் அகால மரணமானார்கள். இவர்களுக்கும் இதன்பால் கொல்லப்பட்ட அனைத்து மக்களுக்கும் எமது நிறுவனம் சார்ந்த 45 ஆம் நாள் நினைவஞ்சலியை ஆழ்ந்த அனுதாபத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி.11243)

இவ்வண்ணம்
இணைப்பாளர்/பணிப்பாளர்கள்/செயற்குழு
கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம்
கோணாவில்

# 07 ஆம் ஆண்டு நினைவு நாள்

லெப்.அசோக்
செல்வசுந்தரம்-ஜீவநாதன்
(சங்கத்தார் வயல்
இயக்கச்சி,பளை)



| மண்ணில் | வீரச்சாவு |
|---|---|
| 1980 | 1998 |
| 02 | 02 |
| 25 | 09 |

குடும்பத்தின் குலவிளக்காய்
கொடும் பகைக்கு எரிநெருப்பாய்
வரிப்புலியின் புது வரவாய்
வலம்வந்த எம் அசோகா-நீ
விதையான இந்நாளில்
விழிசொரிய துதிக்கின்றோம்

செல்வசுந்தரம்-நவமணி
குடும்பத்தினர்

(5774)

## அமரர் நாட்டுப்பற்றாளர் பொன்.விநாயகமூர்த்தி

### அவர்களின் ஓராண்டு நினைவலைகள்

எமது இல்லத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த அமரர் பொன்.விநாயகமூர்த்தி அவர்களின் மறைவின் ஓராண்டு நினைவினை பணிவுடன் நினைவு கூருகின்றோம்.
அவரது ஆத்மா இறையடியில் இணைய இறைஞ்சுகின்றோம்.

பயனாளிகள், பணிப்பாளர்கள்
யோகர்சுவாமிகள் திருவடி நிலைய
முதியோர் இல்லம்,
வன்னேரிக்குளம்.

(சி.11247)

## 46 ஆம் நாள் நினைவில்...

### வே.வடிவேலு சி.புலேந்திரராசா

இறப்பு .2004-12-26

ஆழிப் பேரலையால் அகாலச் சாவடைந்த
எம் நிறுவனத்தின் அங்கத்தவர்களதும்
பணியாளர், அங்கத்தவர்களது குடும்ப உறவுகளதும்
ஆன்மா இறைபாதம் சேர இறைவனை
வேண்டுகிறோம்

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
முல்லைகிழக்கு,
ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
பிரதான வீதி,
முல்லைத்தீவு.

(சி 11249)

## மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு- கிழக்கு மாகாண சபை

### வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது**
**"ஆ.அ.வ" கடன் இல.1846 - SRI (SF)**
**யாழ். மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி**
**அறிவித்தல் இல: 05**

1.வடக்கு -கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகு செலவு சார்பாக பல தரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ")கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக் கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதி வாய்ந்த கேள்விகோருவோரிடமிருந்து பொறி வைக்கப்பட்ட கேள்விகளைத் தற்போது கோருகின்றார்.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/NECORD/FI/05 | வல்வெட்டித்துறையில் உள்ள மீன் சந்தையை புனர் நிர்மாணம் செய்து பூர்த்தி செய்தல் | M7 | 36,000/= |
| 02 | JF/NECORD/ED/19 | அரியாலை சிறி பார்வதி வித்தியாசாலையில் 110'x25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் பூர்த்தி செய்தல் | M8 | 22,000/= |

3. தகுதி வாய்ந்த கேள்வி கோருவோர் மேலதிக விபரங்களை மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம் NECORD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி:- 021-2223625, தொலைநகல்: 021-2225163, மின்னஞ்சல்: necordjf @sltne.lk

4. ஒப்பந்த ஆவணங்கள் மாசி மாதம் 10ஆம் திகதி முதல் மாசி மாதம் 25ஆம் திகதி வரை முற்பகல் 9.30மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

5. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணை முறிகளுடன் பொறி வைத்த கேள்விகள் "தலைவர், மாவட்டக் கேள்விச் சபை, NECORD, கச்சேரி யாழ்ப்பாணம" இற்கு பங்குனி மாதம் 4ஆம் திகதி பி.ப3.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

06. ஒப்பந்தக்காரருக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் மாசி மாதம் 22ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

க.கணேஷ்,
தலைவர், மாவட்டக் கேள்விச் சபை,
அரசாங்க அதிபர் யாழ்ப்பாண மாவட்டம்.

(சி11315)

## ஆத்ம சாந்தி கிரியை அழைப்பு

தோற்றம் :-1962. 05 .28
மறைவு:- 2005.01.09



### அமரர் அப்பாக்குட்டி வனேசன் (ராசன்)

எனது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் 07-02-2005 அன்று இரணைமடுவிலும் வீட்டுக் கிரியைகள் 9-02.2005 புதன்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இன்று நடைபெறும் ஆத்மாசாந்தி பிரார்த்தனையிலும் கலந்து மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்

இல. 38 திருநகர் வடக்கு
திருநகர்
கிளிநொச்சி

தகவல்மனைவி சுசிலா தேவி
(தேவி)
பிள்ளைகள்.

(5710)

## ஓராண்டு நினைவினில்...



### அமரர் பொன் விநாயகமூர்த்தி

### நாட்டுப்பற்றாளர்

எம்முடன் இணைந்து
சமூகப் பணியாற்றி எம்மை
விட்டு அமரத்துவம் அடைந்த
எம் இனியவனே
உனை நினைந்து என்றும்
போற்றுகின்றோம் நாம்

"எப்பவோ முடிந்த காரியம்"

"ஒருபொல்லாப்பும் இல்லை"

யோகர் சுவாமிகள்
யோகர் சுவாமிகள் திருவடி நிலையம்
முதியோர் இல்லம், ஐயனார்புரம்
முதியவர்கள், உத்தியோகத்தர்,
நிர்வாக உறுப்பினர்கள்.

(சி.11320)

இங்கே வெட்டவும்




நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!

பால்மா பிரியர்களுக்கு கிளிநொச்சி அம்மன் களஞ்சியம் வழங்கும்

மாபெரும் பரிசுப்போட்டி

நீங்கள்
செய்யவேண்டியது இதுதான்!

நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின் மேல்பகுதியை வெட்டிஅதன் பின்புறம் பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதிதினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள். இப்போட்டி பெப்ரவரி மாதம் 1ஆம் திகதிஆரம்பமாகி மறு அறிவித்தல் வரை நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றியாளரின் பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில் பிரசுரிக்கப்படும்.

வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

அம்மன் களஞ்சிய ஊழியர்கள்
இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

அம்மன் களஞ்சியம்
யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5852,5077

கிழமை தோறும் ஒரு ஏசியா
ஈருருளி உரிமையாளராகுங்கள்!



அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

இப்போட்டியில்
வன்னிப்பகுதியைச்
சேர்ந்தவர்கள் மட்டுமே
பங்குபற்ற முடியும்.

(சி-11254)

-பிரிமியர்ஷிப் கால்பந்து போட்டி-

# கோல் காப்பாளர் டேவிட்ஜேம்ஸ் அபாரம் தோல்வியில் இருந்து தப்பியது மான்செஸ்டர்




பிரிமியர்ஷிப் கால்பந்து போட்டியில் செல்சியா, மான்செஸ்டர் சிட்டி இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிந்தது. கழக அணிகளுக்கு இடையிலான பிரிமியர்ஷிப் கால்பந்து போட்டி இங்கிலாந்தின்பல்வேறு பகுதிகளிலும் நடக்கிறது. லண்டனில் கடந்த ஞாயிறன்று நடந்த போட்டியில் செல்சியா, மான்செஸ்டர் சிட்டி அணிகள் மோதின இப்போட்டியில் மான்செஸ்டர் அணி கோல் காப்பாளர் டேவிட் ஜேம்ஸ் அபாரமாக செயல்பட்டார். இவர் சிறப்பாக பந்துகளை தடுக்க செல்சியா அணியால் கோல் ஏதும் அடிக்க முடியவில்லை. குறிப்பாக, ஆட்டத்தின் கடைசி நேரத்தில் செல்சியா அணியின் முன்னணி வீரரான பிராங் லாம்பெர்ட் அடித்த பந்தை தாவிச் சென்று தனது ஒரே கையால் வெளியில் தள்ளி அணியை தோல்வியில் இருந்து மீட்டார் ஜேம்ஸ்.

இறுதியில் ஆட்டம் கோல் ஏதுமின்றி சமநிலையில் முடிந்தது. இத் தொடரில் செல்சியா (65 புள்ளி) முதல் இடத்திலும், ஆர்சனல் (56புள்ளி) இரண்டாவது இடத்திலும் உள்ளன.

## இத்தாலி லீக் கால்பந்துத்தொடர் ஏ.சி.மிலன் லசியோ அணியை தோற்கடித்தது




இத்தாலியன் சீரிஸ் 'ஏ' கால்பந்துத் தொடரில் ஹெர்னன் கிறிஸ்போ கடைசி நிமிடத்தில் கோல் அடிக்க ஏ.சி.மிலன் 2-1 என்ற கோல் கணக்கில் லசியோ அணியை வென்றது. இத்தாலியின் ரோம் நகரில் இத்தாலியன் சீரிஸ் 'ஏ' கால்பந்துத் தொடர் நடக்கிறது. கடந்த ஞாயிறன்று நடந்த போட்டியில் ஏ.சி.மிலன்,லசியோ அணிகள் மோதின.

முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கத் தவறின. பின்னர் இரண்டாவது பாதியின் 56 ஆவது நிமிடத்தில் லசியோ அணியின் மசிமோ ஓடோ முதல் கோல் அடித்தார். இதற்கு பதிலடியாக அடுத்த 18ஆவது நிமிடத்தில் மிலன் அணியின் முன்னணி வீரரான ஆன்ட்ரி ஷெவ்சென்கோ அபாரமான கோல் அடித்து சமன் செய்தார். இதனால் சமநிலை நோக்கிசென்று கொண்டிருந்த ஆட்டத்தைக் கடைசி நிமிடத்தில் மாற்றினார் கிறிஸ்போ.-90 ஆவது நிமிடத்தில் இவர் கோல் அடிக்க மிலன் 2-1என்ற கோல் முன்னிலையில் வெற்றி பெற்றது. தற்போது இந்த அணி 48 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளது. ஜு வெண்டஸ் 50 புள்ளியுடன் முதல் இடத்தில் உள்ளது.

## பெல்சவுத் ஓபன் டென்னிஸ் கஸ்டன் காடியோ பட்டம் வென்றார்



சிலிநாட்டிலுள்ள வினாடெல்மார்பில் முன்னணி வீரர்கள் பங்கேற்ற சர்வதேச அளவிலான பெல்சவுத் ஓபன் டென்னிஸ்தொடர் நடந்தது. நேற்றுமுன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் அர்ஜென்டினாவின் கஸ்டன் காடியோ, சிலியின் பெர்னாண்டோ கோன் செலிஜடரை எதிர்த்து விளையாடினார். இப்போட்டியில் அனுபவ வீரரான காடியோ 6-3,6-4 என்ற நேர் செட்களில் எளிதில் வெற்றிபெற்று கோப்பையை கைப்பற்றினார்.



நேற்று முன்தினம் ஹைதராபாத் ஓபன் டென்னிஸ் போட்டிகள் தொடங்கின. தொடக்க விழா நிகழ்ச்சியில் அமெரிக்காவின் மூத்த மற்றும் முன்னணி வீராங்கனையான மார்ட்டினா நவரத்திலோவாவுடன், மகிழ்ச்சி பொங்கும் முகத்துடன் இந்திய வீராங்கனை சானியா மிர்சா.

## ஸ்பானிஷ் லீக் கால்பந்து தொடர்; பார்சிலோனா அணிக்கு அதிர்ச்சித் தோல்வி

ஸ்பானிஷ் லீக் கால்பந்து போட்டியில் பார்சிலோனா அணி அதிர்ச்சித் தோல்வி அடைந்தது. முன்னணி கழக அணிகள் மோதும் ஸ்பானிஷ் லீக் கால்பந்து தொடர் மாட்ரிட் நகரில் நடக்கிறது. கடந்த ஞாயிறன்று நடந்த போட்டியில் எப்.சி. பார்சிலோனா, அட்லிடிகோ மாட்ரிட் அணிகள் மோதின. அட்லிடிகோ அணியின் ஆட்டம் வழக்கத்தைவிட அபாரமாக இருந்தது. இந்த அணியின் பெர்ணான்டோ டோரஸ் இரண்டு கோல் அடித்தார்.

இதன் மூலம் பார்சிலோனா அணி 0-2 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தது. அணியின் நட்சத்திர வீரரான ரொனால்டினோ 70ஆவது நிமிடத்தில்கிடைத்தபெனால்டி வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளத் தவறினார்.

கடந்த 2003 டிசம்பர் 6 இக்குப் பிறகு பார்சிலோனா அணி சொந்த மண்ணில் பெறும் முதல் தோல்வி இது. ஆனாலும் புள்ளிப் பட்டியலில் இந்த அணி 51 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்தில் இருந்து வருகிறது. ரியல் மாட்ரிட் (47புள்ளி) இரண்டாவது இடத்திலும்,வலன்சியா (38 புள்ளி) மூன்றாவது இடத்திலும் உள்ளன.

## ஐ.சி.சியின் வீரர்கள் தரவரிசை அறிவிப்பு சிறந்த சகலதுறை வீரராக பிளின்டொப்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் அன்ரு பிளின்டொப் ஒருநாள் போட்டி தரப்படுத்தலில் பந்து வீச்சு, துடுப்பாட்டம் இரண்டிலும் பத்து பேரிற்குள் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

ஐ.சி.சி டெஸ்ட் ஒருநாள் போட்டிகளில் வீரர்கள் வகிக்கும் தகுதியை நேற்று வெளியிட்டது.

இதில் அன்ரு பிளின்டொப் ஒரு நாள் போட்டியில் பந்து வீச்சில் 736 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்திலும், துடுப்பாட்டத்தில் 718 புள்ளிகளுடன் ஆறாவது இடத்திலும் உள்ளார்.

துடுப்பாட்டத்தில் முதலிடத்தில் தென்னாபிரிக்காவின் ஜக்கலிசும் பந்துவீச்சில் அவுஸ்திரேலியாவின் மெக்ராத்தும் தரப்படுத்தப்பட்டுள்ளனர். ஜக்கலிஸ் டெஸ்ட் துடுப்பாட்டவரிசையிலும் முதலிடத்தை வகிக்கிறார்.

இதேவேளை ஒரு நாள் போட்டியில் முதல் தடவையாக மேற்கிந்திய தீவின் ராம் நரேஷ் சர்வான் துடுப்பாட்டத்தில் இரண்டாவது இடத்தைத்பிடித்துள்ளார்.




## 18ஆம் திகதி பாகிஸ்தான் அணிஅறிவிப்பு; தலைவர் பதவியில் இன்சமாம் நீடிப்பாரா?

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம்செய்து மூன்றுடெஸ்ட் மற்றும் ஐந்துஒருநாள் போட்டியில் விளையாடவுள்ளது. வரும் 25ஆம்திகதி அந்த அணி இந்தியா செல்கிறது. இந்தியத் தொடருக்கான பாகிஸ்தான் அணி வரும் 18ஆம் திகதி அறிவிக்கப்படுகிறது. 16பேர் கொண்ட பாகிஸ்தான் அணி தேர்வு செய்யப்படும் என்று அந்நாட்டு தேர்வுக் குழு தலைவர் வாசிம்பாரி தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணி சமீபத்தில் அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. இதன் மூன்றுடெஸ்டிலும் அந்த அணி படுதோல்வியைச் சந்தித்தது. பெர்த் டெஸ்டில் வரலாறு காணாத தோல்லி ஏற்பட்டது. மூன்றுநாடுகள் போட்டியின் இறுதி ஆட்டத்திலும் தோற்றது. இதனால் அணித்தலைவர் இன்சமாம் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறார். முன்னாள் தலைவர் இம்ரான்கான், முன்னாள் வேகப் பந்து வீரர் சர்பிராஸ் ஆகியோர் அணித்தலைவர் பதவியில் இருந்து இன்சமாமை நீக்கவேண்டும் என்றும் கூறினார்கள்.



இந்தியத் தொடர் மிகவும் முக்கியமானது. இதனால் தலைவர் பதவியில் இருந்து இன்சமாமைத் தற்போது நீக்கினால் அணியில் பாதிப்பு ஏற்படலாம் என்று கருதப்படுகிறது. மேலும் அவருக்கு இன்னொரு வாய்ப்புக் கொடுத்துப்பார்க்கலாம் என்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கருது கிறது இன்சமாம் தலைவர் பதவியில் நீடிப்பாரா அல்லது நீக்கப்படுவாரா என்பது 18ஆம் திகதி தெரியும். இன்சமாம் நீக்கப்பட்டால் யூனுஸ் கான் அல்லது யூசுப் யுகானா அணித்தலைவராக நியமிக்கப்படலாம்.

## பட்டத்துக்காக செரீனா

பரிஸ் ஓபன் டென்னிஸ் தொடரில் முன்னணி வீராங்கனைகளான செரினா வில்லியம்ஸ், மரியாஷெரபேவா, அமெலி மவுரிஸ்மோ ஆகியோர் பங்கேற்கின்றனர்.பிரான்ஸ் தலைநகர் பரிசில் இத்தொடர் நேற்று முன்தினம் முதல் தொடங்கியது. இதில் 1999,2003ல் கோப்பையை வென்ற அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், மூன்றாவது சம்பியன் பட்டத்தை நோக்கி இம்முறை களமிறங்குகிறார்.

## அவுஸ். அணியில் வட்சன் இல்லை அன்ரு சைமன்சுக்கு அணியில்வாய்ப்பு



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடவுள்ளது. 5 ஒரு நாள் போட்டியில் முதல் ஆட்டம் 19 ஆம் திகதி நடக்கிறது. ஒரு நாள் தொடரில் அவுஸ்திரேலிய வீரர் வாட்சன் ஆடவில்லை.

3 நாடுகள் இறுதிப் போட்டியில் அவர் காயம் அடைந்தார். இதனால் அவரால் 6 வாரம் விளையாட இயலாது. சைமண்ட்ஸ் அணியில் இடம் பெற வாய்ப்பு உள்ளது. அவுஸ்திரேலிய அணி இன்று அறிவிக்கப்படுகிறது.

## கிப்ஸ் துடுப்பாட்ட வரிசையில் கிழிறங்கி வருவதற்கு சம்மதம்



தென்னாபிரிக்க ஆரம்ப துடுப்பாட்ட வீரரும், அதிரடி வீரருமான கிப்ஸ் இனி இடைநிலை ஆட்டக்காரராக களமிறங்கவுள்ளார். இதுவரைக்கும் அணியின் தொடக்க வீரராக களமிறங்கிவந்தார். சமீபகாலமாக இவரது ஆட்டம் சரியில்லை. பரிசோதனை முயற்சி யாக நான்காம் நிலையில் இவர் களமிறக்கப்பட்டார். புதிய மாற்றம் நன்றாகவே கைகொடுத்தது. இடைநிலை வீரராக களமிறங்கிய மூன்று போட்டிகளில் 78,50,100 என்று ஓட்டங்களைக் குவித்தார். இனி,இடைநில்லைவீரராக நிரந்தரமாக விளையாட முடிவு செய்து விட்டார் கிப்ஸ்.



உலககோப்பை தகுதிகாண கால பந்து போட்டியில், வடகொரிய அணி இன்று சாய்டமாவில் ஜப்பானை எதிர்த்து விளையாட உள்ளது. இதற்காக டோக்கியோவில் நேற்று வடகொரிய வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். கடந்த 10 ஆண்டுகளுக்கு பிறகு சர்வதேச போட்டியில் வட கொரிய அணி பங்கேற்கிறது. ஜப்பானுடன் பழைய பகையை மறந்து அந்நாட்டில் வட கொரியா விளையாடுவது கூடுதல் விஷேடம்.



ஆசிய உலகக் கோப்பை தகுதி கால்பந்து போட்டியில் இன்று குவைத் அணி தென்கொரிய அணியை சந்திக்கிறது. இதற்காக சியோல் மைதானத்தில் குவைத் வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

## சிந்தனைக்கு



பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம் வாய்ந்த ஆயுதமாகவே, கரும்புலிகளை நான் உருவாக் கியுள்ளேன்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 09-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## அரசே முழுப்பொறுப்பு.

மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் அவர்களும் மற்றும் மூன்று போராளிகளும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு எந்த வித விசாரணைகளும், விளக்கங்களும் இன்றி அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். இக்கொலைக்கு யார் கருவியாக இருப்பினும், எதுவித சந்தேகமும் இன்றி சந்திரிகா அரசின் அனுமதியும் ஆதரவுமின்றி இப்படுகொலைகள் இடம் பெற்றிருக்க முடியாது.

விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண முக்கியஸ்தர் ஒருவரை அரசாங்கத்தின் தீர்மானம் இன்றிப் படுகொலை செய்தல் என்பது சாத்தியப்பாடானதொன்றல்ல. அதிலும் சிறிலங்கா இராணுவத்தின் 24 மணி நேர கண்காணிப்பிலுள்ள பிரதான வீதி ஒன்றில் வைத்துச் சுட்டுக்கொல்லப்படுவதென்பது இராணுவத்தின் அங்கீகாரம் பெறப்படாத சம்பவமாக எவ்வாறு இருக்க முடியும்.

அது மட்டுமன்றி இராணுவத்தரப்பின் தகவல் பரிமாற்றம் இன்றி இப்படுகொலைகள் புரியப்படிருக்கவாய்ப்பும் இல்லை. ஏனெனில் கௌசல்யன் அவர்களோ அன்றி விடுதலைப்புலிகளின் வேறு உறுப்பினர்களோ அடிக்கடி நடமாடும் போக்குவரத்துச் செய்யும் வீதியல்ல அது. ஆகையினால் கௌசல்யன் அவர்களின் பயணம் தொடர்பான தகவல் ஆயுதப்படைத்தரப்பாலேயே கொலை புரிந்ததோருக்கு நிச்சயமாக முன்கூட்டியே வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

சுனாமி ஏற்படுத்திய பேரழிவைத் தொடர்ந்து சிறிலங்கா அரசினால் தூண்டப்படும், ஆதரவு வழங்கப்படும் இத்தகைய படுகொலைகள் சற்றுத் தணிந்திருந்த போதும் கௌசல்யன் அவர்களின் படுகொலைக்கு முன்பதாகவே மீண்டும் அரசாங்கம் தனது நடவடிக்கைகளில் முனைப்புக் காட்டத்தொடங்கியிருந்தது என்பதே உண்மை அந்தவகையில் கடந்த நான்காம் திகதி மட்டக்களப்பு கிரான் பகுதியில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

ஆனால் தற்பொழுது கௌசல்யன் அவர்கள் சுட்டுக்கொல்லப் பட்டமையானது அரசாங்கம் மீண்டும் தனது பழைய வழிமுறையை முனைப்புப்படுத்த முற்பட்டுள்ளது என்றே கொள்ளவேண்டியுள்ளது. அதாவது அரசியல், இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளுக்கு நெருக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையில் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது.

இந்நிலையில் தற்பொழுது எழும் கேள்வியானது அரசாங்கம் இப்படுகொலைகளைப் புரிந்ததன் நோக்கம் என்ன என்பதே? அதாவது சுனாமி அனர்த்தத்தினால் மக்கள் அடைந்துள்ள கவலை நிலை காரணமாக இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகள் பின்தள்ளப்பட்டுள்ள நிலையிலும், யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையிலும், அரசாங்கம் இத்தகைய படுகொலைகளைப் புரிவதற்குக் காரணம் என்ன?

ஒருவகையில் பார்த்தால் சுனாமி விளைவித்த அனர்த்தமானது இலங்கை மக்களுக்குப் பேரழிவை ஏற்படுத்தியிருப்பினும் சிறிலங்கா ஆட்சியாளர்களை அது அரசியல் இராணுவ-பொருளாதார ரீதியில் பலப்படுத்தியுள்ளது என்றே கூற முடியும். அதாவது சிறிலங்கா அரசாங்கம் சந்தித்த பெரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து அது சிறிது காலத்திற்காயினும் மீள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இத்தகைய தொரு சூழ்நிலையில் யுத்த நிறுத்தம் பேணப்படுதல் வேண்டுமென்றோ அன்றி சமாதான முயற்சி மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்ற தேவையோ அரசிற்கு தற்பொழுது இல்லை. ஆகையினால் தமது இராணுவ நடவடிக்கைகளை முனைப் புப்படுத் தும் வகையில் இத்தகைய நடவடிக்கையை ஆட்சி யாளர்கள் மேற் கொண்டிருக்கலாம்.

மற்றொரு புறத்தில், சுனாமி அனர்த்தத்தினால் கிடைக கப்பெற்றுள்ள பெருந்தொகை வெளிநாட்டு உதவிகளை வடக்கி ற்கும், கிழக்கிற்கும் பகிர்ந்தளிக்கப்படவேண்டியதொரு நிலை அரசாங் கத்திற்கு உருவாகியுள்ளது. ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் இத்தகைய தொரு செயற்பாட்டிற்கு எப்பொழுதுமே தயாராக இல்லை. சில விமர்சகர்கள், நோக்குநர்கள் அன்றி, நாடுகள் சிறிலங்கா ஆட்சியாளர்கள் நிதியுதவியினை விடுதலைப்புலிகளிடம் பகிர்ந்தளிக்கவே விரும்பவில்லை எனக் கூற முனையலாம்.

ஆனால் அடிப்படையில் நிலைமை அவ்வாறானதாக இல்லை. சிறிலங்கா ஆட்சியாளர்கள் எவருமே தமிழர் தாயகப் பகுதியில் புனர்வாழ்வுப் பணிகளையோ அன்றி மீள்கட்டுமானப் பணியையோ அன்றி அபிவிருத்திப் பணியையோ மேற்கொள்வதற்குத் தயாராக இல்லை, ஏனெனில் இது அவர்களின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு மாறான முரணான செயற்பாடாக அமையக்கூடியதாகும்.

இத்தகையதொரு சூழ்நிலையில் தமிழர் தாயகப் பகுதியில் மீள்கட்டுமானப் பணிகளுக்கான செயற்பாடுகளை முடக்குவதற்கும், இனங்களிடையில் முறுகல் நிலையைத் தோற்றுவிக்கவும் தற்போதைய அரசியல் போக்கைத் திசைதிருப்பவுமே சிறிலங்கா ஆட்சியாளர்கள் இப்படுகொலைகளை மேற்கொண்டனர் என்பதே உண்மை. அதாவது இப்படுகொலைகள் தமிழர் தாயகத்திற்கான வெளிநாட்டு நிதியுதவிகள் பகிர்ந்தளிப்பிற்கு அரசு போட முனைந்துள்ள முட்டுக்கட்டையாகும்.

# லெப்.கேணல் கௌசல்யன் உட்பட ஐவரின் கொலைக்கு பொது அமைப்புகள் கண்டனம்

வெலிக்கந்தப் பகுதியில் மட்டு -அம்பாறை அரசியல் துறைப்பொறுப்பாளர் லெப் கேணல் கௌசல்யன் உட்பட ஐவர் கொல்லபட்ட சம்பவம் குறித்து பல்வேறு பொது அமைப்புகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

மன்னார் மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு எழுதிய கடிதத்தில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடக்கும் சகல குற்றச் செயல்களுக்கும் படைத்தரப் பினரே பொறுப்பேற்க வேண்டும். இல்லாவிட்டால் பொலிஸ் படைச் செயற்பாடுகளையும் நீதிமன்ற நடவடிக்கைகளையும் அப்பகுதியிலிருந்து விலக்கிக் கொண்டு வெளியேற வேண்டும்.

இதனை நாம் அரச தரப்பிலான ஓர் பாரிய யுத்த நிறுத்தமீறலாகக் கருதுகின்றோம் ஏனெனில் புலி அமைப்பினைத் தவிர்ந்த ஏனைய சகல ஆயுத குழுக்களிடமிருந்தும் நீண்டகாலத்துக்கு முன்னரே ஆயுதங்கள் களையப்பட்டிருக்க வேண்டும். இப்பகுதிகளில் எந்தவொரு ஆயுதக்குழுவும் அரசகட்டுப்பாட்டுப் பகுதிகளில் செயற்படாதவாறு உறுதி செய்திருக்கவேண்டியது படைத்தரப்பினரின் கடமையாகும் ஆனால் இது கருணாகுழுவினரின் செயல் என்று கூறியிருப்பதன் மூலம் படைத்தரப்பினரே இப்பகுதியில் கருணாகுழு செயற்படுவதை ஏற்றுக்கொண்டுள்ளது. விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே கருணா குழுவில் எஞ்சியிருப்பதுவும் அவர்களும் படைத்தரப்பினரின் உதவி ஒத்தாசை களுடனேயே செயற்பட்டு வருகின்றனர். எனபதுவும் நன்கு தெரிந்த விடயமாகும் படைத்தரப்பின் உதவி யில்லாமல் அவர்களாக ஓர் அங்குலம் தானும் நகர முடியாது.

இக்கோழைத்தனமான செயலினால் பாதிப் படையப்போவது நிர்கதியற்றியிருக்கும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களே. எனவே அவர்கள் மனிதாபி மானமற்றதும் காட்டுமிராண்டித்தனமானதுமான இக்கொலைகளுக்கெதிராக கிளர்ந்தெழுவார்கள். என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எனவே புலிகளின் தலைமை இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறும் போது மேலும் பொறுமையை அனுசரிக்காதென்பதால் இவ்விடயத்தையிட்டு சர்வதேச சமூகம் கடுமையான நிலைப்பாட்டை எடுத்து இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து இவ்வகையான செயற்பாடுகள் தவிக்கப்படுவதை உறுதிப்படுத துவதுடன் இந்தச் செயலை ஓர் புரிந்துணர்வு ஒப்பந்த மீறலாகப் பிரகடனப்படுத்துமாறு கண்காணிப்புக் குழுவினரையும் கேட்டுக் கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளி.மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் போர்நிறுத்தக் கண்காணிப்புப்புக் குழு தலைவருக்கு எழுதிய கடிதத்தில் விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யனும், அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு அவர்களும் பொலநறுவை மாவட்டத்திலுள்ள வெலிக்கந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட கொடூரமான செயலை கிளிநொச்சி வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது. சிறிலங்காவின் அரச பாதுகாப்புப் பிரதேசத்தில் இடம்பெற்ற இக் கொலைகளுக்கு அரச படைகளே பொறுப்பேற்க வேண்டுமென வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் சுட்டிக்காட்டுகின்றது. கடற்கோள் பேரனர்த்தத்தினால் தமிழர் தாயக மக்கள் பெரும் உயிரிழப்புக்களையும், உடைமையிழப் புக்களையும் அடைந்துள்ள இவ்வேளை அந்தப் பாதிப்புக்களில் இருந்து மக்களை மீட்கும் பணியிலேயே விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் செயற்பட்டு வருகின்றமை அனைவரும் அறிந்ததே. கௌசல்யன் அவர்களும் அப்பணியிலேயே முழு மையாக ஈடுபட்டு வந்தார். இச் சூழ்நிலையில் இச் சம்பவம் இடம்பெற்றிருப்பது. தமிழ் மக்களை ஆழமான கவலை கொள்ளச் செய்துள்ளதுடன் ஆத் திரமடையவும் செய்துள்ளது. இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுமானால் விடுதலைப்புலிகள் அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள மக்கள் நிர்ப்பந்தம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதை வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம்மிகுந்த வேதனையுடன்கூறிவைக்க விரும்புகின்றது. போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வினராகிய தாங்கள் அக்கொலைகள் தொடர்பான பூரணமான விசாரணையை நடாத்தி உண்மை நிலையை வெளிப்படுத்தவேண்டுமென வெகுசன அமைப்பு தயவுடன் கேட்டுக்கொள்கின்றது. எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் விடுத்த அறிக்கையில். மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் லெப.கேணல் கௌசல்யன் உட்பட வீரச்சாவினைத் தழுவிக் கொண்ட நான்கு போராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியினைத் செலுத்துகின்றோம்.

லெப்.கேணல் கௌசல்யன் மீதும் அவருடன் வந்த போராளிகள் மீதும் நடாத்தப்பட்ட தாக்குதல் கண்டிக் கத்தக்கதோடு அரசின் கீழ்த்தரமான செயலாகவே அமைகிறது. விடுதலைப்புலிகளின் ஆயுதப் பலத்திற்கு முகங்கொடுக்க முடியாத இலங்கை அரசும் இராணுவமும் சமாதானம் என்ற பொய்த்தளத்தில் நின்றவாறு விடுதலைப்புலிகளையும், தமிழ் மக்களையும் அழிப்பதற்கு பல வழிகளில் முயன்று வருவது உண்மையே. இந்த நிலைப்பாட்டின் ஆடுகளமாக கிழக்குப் பிரதேசத்தை அரசும், இராணு வமும் பயன்படுத்துக்கின்றது. கருணா குழுவினர் என்ற போர்வையைத் தனதாக்கிக் கொண்ட இலங்கை இராணுவம் இத்தாக்குதல்களை நடத்தி வருகின்றது. இந்த நிலை குறித்து மிகுந்த விசனம் அடைகின்றோம் ஆயுதம் இன்றி நடமாடுகின்ற விடுதலைப்புலிகள் மீது கருணா குழு என்ற போர்வையோடு இராணுவம் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் இந்த நிலை குறித்து மிகுந்த கண்ட னத்தைத் தெரிவிக்கின்றோம் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை விடுத்த அறிக்கையில்,பொலநறுவை-மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் வெலிக்கந்தவுக்கு அருகில் புனானையில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற அதிரடித் தாக்கு தலில் விடுதலைப்புலிகளின் மட்டு- அம்பாறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யனும் மூன்று புலிப்போர ளிகளும் முன்னாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு ஆகியோர் கொல்லப் பட்டதானது அரசின் திட்டமிட்ட அரசியல் அநாகரிகச் செயற்பாடாக அமைகிறது இது மாத்திரமின்றி போருக்கான சூழலை உருவாக்கும் அரசின் திட்ட நோக்கமே இது. இதை நாம் வன்மையாகக் கண்டிக் கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் யாழ்.கல்லைக்கழக மாணவர் ஒன்றியம் யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை என்பனவும் கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளன. (36,சு,18,சோ)

# நெருப்புடன் விளையாடும் சிறிலங்கா அரசாங்கம் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும்

**-வன்னி பா.உ.செல்வம் அடைக்கலநாதன்**

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டபின் இராணுவக் கட்டுப் பாட்டு பிரதேசங்களில் பல போரா ளிகளை சிறிலங்கா அரசபடைகள் கொலை செய்துள்ளன. அந்த வகையில் தான் இன்று மட்டகளப்பு மாவட்ட அரசியல் துறைப்பொறுப் பாளர் லெப்.கோணல் கௌசல்யன் உட்பட நான்கு பேரையும் எமது முன்னாள பாராளுமன்ற உறுப்பி னரான சந்திரநேரு ஆகியோ ரையும் சிறிலங்கா அரச படைகளே கொலை செய்துள்ளன என வன்னிமாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். வெலிக்கந்தவி லுள்ள இரு பாரிய இராணுவ முகாம்களுக்கு இடையிலேயே இப்படுகொலைச் சம்பவம் நடை பெற்றுள்ளது. இதனால் இப்படு கொலையை அரசாங்கமே பொறுப் பேற்க வேண்டும் இவ்இரு இராணுவ முகாம்களினதும் பொறுப் பதிகாரிகள் சேவையில் இருந்து உடனடியாக நிறுத்தப்பட்டு பூரண விசாரணைகள் மேற்கொள்ளப் படவேண்டும். இராணுவத்தினரின் ஒத்துழைப்புடனேயே இப்படு கொலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்படுகொலையை அரசு விளை யாட்டாகக் கருதக்கூட அரசாங்கம் நெருப்பில் கையை வைத்துள்ளது. இதனால் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும் எனத்தெரிவித் துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகள் அரசாங்கத்தின் மேல் அதாவது சமாதானத்தின் மேல் உள்ள நம்பிக்கை காரணமா கத்தான் நிராயுத பாணிகளாக அரசியல் செய்வதற்காக வட-கிழக்குப் பகுதிகளிலே அவர்களுடைய அரசியல் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். இப்படியான ஓர் சூழ்நிலையிலே இப்படியான சம்பவம் நடைபெற்றுள்ளமையை நாங்கள் வன்மையாகக் கண்டிக் கின்றோம். இவை பேச்சுவார்த் தைகளுக்கு மேலும் தடையாக, முட்டுக்கட்டையாக இருக்கும் என்ப தையும் நாங்கள் கூறிவைக்க விரும்புகின்றோம். (சு.36,சோ)

# கொரிய மருத்துவக் குழுவின் விசேட சிகிச்சை முகாம்

(அலுவலக செய்தியாளர்)

கொரியநாட்டைச்சேர்ந்த மருத்துவ நிபுணர்குழுவொன்று இன்றும், நாளையும், நாளை மறு தினமும் அக்கராயன் மருத்துவமனையில் விசேட சிகிச்சைமுகாமொன்று நடத்தவுள்ளது.

காது, மூக்கு,தொண்டை, கண், பல்,நெஞ்சு, நரம்பியல், மூட்டு வாதம் , பெண்றோயியல் நிபுணர்களும், அக்குபஞ்சர் வைத்தியர்களும் இக்குழுவில் இடம் பெறுகின்றனர். இந்த வாய்ப்பினை அக்கராயன் பகுதியிலும் ஏனைய பிரதேசங்களிலுமுள்ள நோயாளர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியுமென கிளிநொச்சி மாவட்ட மாகாண சுகாதாரசேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். இந்த மருத்துவமுகாமிற்கான ஏற்பாடுகளை வன்னி மெதடிஸ்த திருச்சபை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# க.பொ.த (உ/த) பரீட்சை ஜூனில் விடுமுறை தினங்களும் மாற்றம்

க.பொ.த (உ/த) பரீட்சை வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதிதொடக்கம் யூலை 1ஆம் திகதி வரைநடைபெறும் எனபரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. விடைத் தாள்கள் திருத்தும்பணி ஜூலை 23 ஆம் திகதிவரை நடைபெறும். இதற்கமைய முதலாம் தவணை விடுமுறை ஏப்ரல்9 முதல் 24 ஆம் திகதி வரை வழங்கப்படும் இரண்டாம் தவனை விடுமுறை ஜுன் 4 ஆம் திகதி முதல் ஜூலை 3 ஆம் திகதி வரை வழங்கப்படும் மூன்றாம் தவணை பாடசாலை நாட்கள் ஜூலை 4 முதல் செப்ரம்பர் 16வரையும் பின்னர் செப்26 முதல் டிசம்பர் 9 வரை யுமாக இருக்கும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# அவசர கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 2004/2005 கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழககங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல் வியாழக்கிழமை காலை10.00 மணிக்கு கிளி. மாவட்ட புகுமுகமாணவர் ஒன்றியத்தில் நடைபெற இருப்பதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் இதுவரை தம் பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் பதிவு செய்யுமாறும், பதிவு செய்தவர்கள் தம் பதிவினை உறுதி செய்யுமாறும் கிளி/மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

# ஜப்பானிய விசேட தூதுவர் அகாசி இன்று இலங்கை வருகிறார்.

இலங்கைக்கான ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசி இன்று இலங்கை வரவிருக்கின்றார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் சமாதான நடவடிக்கைகள் மற்றும் நிகழ்கால நிலைமைகள் என்பன குறித்து, அகாசி அரசாங்கத்துடனும் ஏனைய தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்த விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இவ் விஜயத்தின்போது அகாசி சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஏனைய உயர்மட்டத் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து சமாதானம், புனர்நிர்மாண நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடுவார்கள் என்று ஜப்பானியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில்தெரிவிக்கப்படுகிறது.எதிர் வரும்13ஆம்திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கும் ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசி கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ விடுதலைப்புலிகளையும் சந்திக்கவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இதனைத்தவிர ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணம் மற்றும் தென்பகுதிகளுக்கும் இவர் விஜயம் செய்யவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## எமது...

உறுப்பினரான அரியநாயகம் சந்திரநேருவின் பாதுகாப்பிற்கென வந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் மேற்படி நபர்கள் இராணுவச் சீருடையில் இருந்ததால் எந்த எதிர்ப்பும் காட்டவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

## போராளிகள் வித்துடல்....

உடலங்கள் மீதான பரிசோதனை பொலநறுவை வைத்தியசாலையில் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் பதில் சட்ட வைத்திய அதிகாரியினால் பிரேத பரிசோதனை நடத்த முடியாது என இறுதி நேரத்தில் அறிவிக்கப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. இந்த நடவடிக்கையானது சிறிலங்கா பொலிசாரின் திட்டமிட்டு இழுத்தடிக்கும் செயல் என பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே இந்த முடிவு அறிவிக்கப்பட்டிருந்தால் உடல் பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளில் இத்தகைய தாமதங்கள் ஏற்பட்டிருக்க மாட்டாது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் விதிமாறன் மற்றும் உயிரிழந்த போராளிகளின் உறவினர்கள் ஆகியோர் கண்காணிப்புக் குழுவினரின் உதவியுடன் வைத்தியசாலைக்குச் சென்று உடலங்களை அடையாளம் காட்டினார்கள். இலங்கை நேரப்படி மாலை 5.30இற்குஇந்தஉடலங்கள் அங்கிருந்து மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மரண விசாரணை இன்று நடைபெற்று பின்னர் கொக்கட்டிச்சோலைக்கு கொண்டு செல்லப்படும்.. இதேவேளை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இன்று காலை மரணமான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அரியநாயகத்தின் உடலம் தொடர்ந்தும் கொழும்பு தேசிய வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## போராளிகள்....

முன்தினம் மாலை 7.45 மணியளவில் இராணுவ மற்றும் பொலிஸ் சீருடைதரித்தவர்கள் மறித்துத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்டினன்ட் கேணல் கௌசல்யன், மேஜர் புகழன், மேஜர் செந்தமிழன், இரண்டாம் லெப்டினன்ட் விதிமாறன் ஆகிய நான்கு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தங்கள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

அரசியல் பணிக்காக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினூடாகப் பயணித்த எமது போராளிகள் இரு இராணுவ முகாம்களுக்கு இடையேயுள்ள பிரதேசத்தில் சுட்டுக்கொல்லப்பட்டது அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலாகும். தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசிற்குமிடையே எய்தப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்த விதிகளை இச்சம்பவம் கேள்விக்குரிய தாக்கியுள்ளது. சம்பவம் நடந்த இடம் மற்றும் சீருடை என்பன இக்கொலைகளில் அரச படைகளின் அனுசரணையை சுட்டிநிற்பவையாய் அமைகின்றன.

மனிதநேயப் பணிக்காக பயணித்த போராளிகளை இலக்குவைத்து நடத்தப்பட்ட இச்சம்பவம் தொடர்பாகவும் இதனால் ஏற்படப்போகும் விளைவுகள் தொடர்பாகவும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தனது அவதானிப்பையும் அறிக்கையையும் வெளியுலகிற்குத் தெரியப்படுத்தவேண்டும். முன்னெடுத்துச் செல்லப்படும் மனிதநேயப் பணிக்கும் தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதான முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கும் இச்சம்பவம் பெரும் பங்கம் விளைவிக்கக் கூடும் என நாம் அஞ்சுகிறோம். இத்தகைய துரோகச் செயல்கள் மூலம் தமிழ் மக்களின் பலத்தை சிதைக்க முற்படும் சக்திகளை உலகத் தமிழ்ச் சமூகமும் மனிதநேய ஆர்வலர்களும் சர்வதேச சமூகமும் தெளிவாக இனங்கண்டுகொள்ளவேண்டியது அவசியம்.

கௌசல்யன் குழுவினருடன் ஒன்றாகப் பயணித்த முன்னைநாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மனிதஉரிமை ஆர்வலருமான சந்திரநேரு அரியநாயகம் அவர்களின் மறைவு தமிழ் மக்களுக்கு ஈடுசெய்யமுடியாத ஒன்றாகும். வடக்குக் கிழக்கு மனித உரிமைச் செயலகத்தின் ஆரம்பகால உறுப்பினராக இருந்து மட்டு-அம்பாறை மாவட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விழிப்புடன் செயலாற்றிவந்த இவரது இழப்பு மானுடநேயம், மனித உரிமை விழுமியங்களை மதிக்கும் எல்லோருக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும். இவரது அளப்பரிய சேவையை கருத்திற் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அன்னாரை நாட்டுப்பற்றாளராகப் பிரகடனப்படுத்துகின்றது. அன்னாரது உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## தமிழ்....

கவலையையும் அதிர்ச்சியையும் தந்துள்ளது முஸ்லிம்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஆரம்பம் முதல் இறுதி மூச்சுவரை இதய சுத்தியோடு ஈடுபட்டவர் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தமிழர்....

மலை எனப் பலமாவட்டங்களிலும் இடம்பெற்ற இத்துக்கதின அனுஷ்டிப்பில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைச் செயலகங்களில் தேசியக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டிருந்தன இதேவேளை, மட்டக்களப்பு உட்பட வடக்கு-கிழக்கின் அனைத்துப்பகுதிகளிலும் இன்று முதல் 5நாட்களுக்குதுக்க தினமாக அனுஷ்டிக்குமாறு பொது மக்கள் அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யன் கொல்லப்பட்டமையைக் கண்டித்தே இதற்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. இதேவேளை திருகோணமலையில் இன்றைய தினம் கடையடைப்பு ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (32),(33,41)

## இராணுவத்திடம்...

வருவது குறித்து இராணுவத்தின் கவனத்திற்கு பல தடவைகள் கொண்டு வந்துள்ளோம். சந்திப்புகளின் போதும் பல முறை பேசியுள்ளோம். அப்படியிருந்தும் இப்படியான போர் நிறுத்த மீறல்கள் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன. நேற்று நடை பெற்ற சம்பவமானது பாரிய போர் நிறுத்த மீறலாகும் என்று கூறினார். இப்படியான பயணங்களின் போது விடுதலைப் புலிகள் இராணுவத்தின் பாதுகாப்பை நாடத் தவறி விட்டதாக இராணுவத் தரப்பிலிருந்து வெளியிடப்பட்டுள்ள கருத்து குறித்து அவரிடம் கேட்ட போது, இராணுவ சோதனைச் சாவடிகளில் பதிவு செய்துதான் இந்தப் பயணங்களை எமது போராளிகள் மேற்கொள்கின்றார்கள். அப்படி பதியாமல் இப்படியான பயணங்களை இராணுவகட்டுப்பாட்டு பகுதி ஊடாக மேற் கொள்ள முடியாது. மட்டக்களப்பு ஓட்டமாவடியிலும், வவுனியா ஓமந்தையிலும் இப்படியான பதிவுகள் செய்யப்படுகின்றன. இந் நிலையில் இராணுவத்திற்கு தெரியாமல் இப்படியான பயணங்கள் நாங்கள் மேற் கொள்வதாகக் கூறும் குற்றச்சாட்டுக்களை ஏற்க முடியாது என குறிப்பிட்டு, தலைமைப் பீடத்தின் அழைப்பு வரும்பொழுது போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் அனுசரணை, இராணுவ பாதுகாப்பு ஆகியவற்றைக் கோரினால் உரிய நேரத்தில், உரிய முறையில் அவை கிடைப்பதில்லை என்றும் தெரிவித்தார்.

## கௌசல்யன்கொலை....

யதுஅரசாங்கத்தின் கடமையாகும்.அந்தக்கடமையை அரசாங்கம் செய்யத் தவறிவிட்டது எனத் தெரிவித்துள்ளார்.

## கௌசல்யன்....

தெரிவிக்கையில்,இந்தச் சம்பவமானது சமாதான முயற்சிகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இரு பக்கமும் இராணுவ முகாம்கள் அமைந்துள்ள அரசாங்க கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இடம் பெற்ற இந்த சம்பவமானது திட்டமிட்ட பழி வாங்கும் செயலாகவே நாம் கருதுகின்றோம். இராணுவத்திற்கு தெரியாமலோ அல்லது அராசாங்கத்திற்கு தெரியாமலோ இப்படியான சம்பவம் நடைபெற வாய்ப்புகள் இல்லை. விடுதலைப் புலிகள் சமாதான முன்னெடுப்பகளில் நிதானமாக செயல்பட்டுக் கொன்டிருக்கும் இந்த நேரத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. 1983 ஆம் ஆண்டு போரா? சமாதானமா? என்பதை தமிழ் மக்கள் தீர்மானிக்க வேண்டும் என்று மறைந்த சனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனா கூறிய வார்த்தை சர்வதேச நாடுகளை உலுக்கியது.அதனை இன்று கூறும் நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதே வேளை சிறிலங்கா பாராளுமன்றத்தில் இன்று இந்தச் சம்பவம் தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு விசேட அறிக்கையொன்றைவெளியிட விருக்கின்றது.

# சாவு அறிவித்தல்



## வேலுப்பிள்ளை பரஞ்சோதி

நெடுந்தீவைப்பிறப்பிடமாகவும் இல.74 ஸ்கந்தபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை பரஞ்சோதி 08.02.2005 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற சதாசிவம் பொன்னம்மா ஆகியோரின் அன்புமகளும், இராசையா வள்ளியம்மையின் அன்பு மருமகளும், இளைப்பாறிய கிராமஅலுவலர் இராசையா வேலுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், நிர்மலன், விபுலன், பாமினி, பவானி, ஆகியோரின் பாசமிகு தாயாரும்,குணசீலன் , குணாணினி ஆகியோரின் சிறியதாயாரும் சிறிப் பிரியாவின் அன்பு மாமியும் கிருஷ்ணமூர்த்தி, கிருஷ்ணசோதி, காலம் சென்ற மன்மதராசா, பூபாலசிங்கம், தட்சணாமூர்த்தி, லோகநாயகசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 09.02.2005 புதன்கிழமை (இன்று) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப.2 மணியளவில் ஸ்கந்தபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

தகவல்
வேலுப்பிள்ளை (கணவர்),
G..S

(5713)


# VACANCIES

TRO invites applications for the following vacancies. All applicants shall forward their details with their curriculum vitae on or before 15 th February 2005 to the address below.

1.Accountant- Qualified to ACCA/ CIMA or similar and who have experience in managing the accounts division and be responsible for producing financial accounts of the organization.

2. Programme manager- Qualified in management studies and Planning.A management graduate is preferable with some experience in similar works.

3. English translator with media experience.

4.Project manager specialized in water and sanitation.

Salaries and other benefits are negotiable.

Director, Disaster Management Unit, Rapid Rehabilitation and Development services programme, Tamils Rehabilitation Organization, Jaffna Road Kilinochchi.

(சி11322)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 09ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது